# ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி

(தன்னாட்சி)

**மதுரை - 625 002**

NAAC மறுதகுதி தரமதிப்பீட்டுக் குழுவினரால்
நான்காம் சுழற்சியில் “ B++ ” மதிப்பிடப்பட்டுள்ளது

**(CGPA of 2.85 on 4 Point Scale)**



# கல்லூரி ஆண்டு மலர்

# 2023 - 2024

**MAGAZINE 59 - 2023 - 2024**

# ஆசிரியர் குழு
# ஆண்டு மலர் 2023 – 24

தலைவர் : முனைவர் திருமதி **சு. வானதி,** எம்.எஸ்.சி., எம்.ஃபில்.,பி.எச்.டி.
முதல்வர்

**உறுப்பினர்கள்:**

முனைவர் திருமதி **தா.மோ. அமலா,** எம்.ஏ., எம். ஃபில்., பி.எச்.டி.
இணைப்பேராசியர் மற்றும் துறைத்தலைவர்,ஆங்கிலத்துறை

முனைவர் **அ. இராஜேஷ்வரபுஷ்பம்,** எம்.ஏ. எம்ஃபில்.,பி.எச்.டி.
இணைப்பேராசிரியர், ஆங்கிலத்துறை

முனைவர் திரு. **பா.கார்த்திகேயன்,** எம்.ஏ.,எம்ஃபில்., பி.எச்.டி.
உதவிப்பேராசிரியர், ஆங்கிலத்துறை (அண்ணாமலை பல்கலைக்கழகம்)

முனைவர் திருமதி **கோ.விஜெயம்,** எம்.ஏ.,எம்ஃபில்., பி.எச்.டி., சி.ஜி.டி.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

மாணவ பேரவைத் தலைவி : செல்வி.சி.ரம்யா
மூன்றாமாண்டு விலங்கியல் (ஆங்கில வழி)

# ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி

(தன்னாட்சி)

## மதுரை - 625 002



நான் மாடக்கூடல் நற்றமிழ் மதுரையில், அன்னை மீனாட்சி பெயர் தாங்கிய எம் கல்லூரி, அரசின் ஆதரவால் 59 ஆண்டுகளாய் ஏழை எளிய கிராமப்புற மாணவியரின் கனவுகளின் திறவுகோலாய் திகழ்கின்றது. அறிவார்ந்த பேராசிரியர்கள், ஆழமாய் கற்கும் மாணவியர், அயராது உழைக்கும் அலுவலகப் பணியாளர்கள் இவர்களின் திறமை திரட்டு இம்மலர் ! மகளிர் கல்வி மணம் நுகர அழைக்கிறேன்.

அன்புடன்

கல்லூரி முதல்வர்

முனைவர் திருமதி **சூ.வானதி,**

எம்.எஸ்.சி., எம்.ஃபில்., பி.எச்.டி.

ஆசிரியடமிருந்து ...

பொற்றாமரைக் குளத்துதித்த பொய்யாமொழிப் புலவனின் இரண்டடி, சேதுபதி பள்ளியில் ஒலித்த பாரதியின் சொல்லடி, கண்ணகி பிடித்த பெண்ணுரிமையின் சிலம்பொலியுடன் வற்றாத வைகைக் கரையினிலே கம்பீரமாய் உயர்ந்தே நிற்கிறது கவின்மிகு ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி .

மாதர் தம் முன்னேற்றத்திற்கு மாதவம் புரிந்திட்ட பாரதியின் கனவினை நனவாக்க 1965ல் இடப்பட்ட ஒரு சிறு விதை 15 துறைகளைக் கொண்ட நல்லதோர் விருட்சமாகி வருடந்தோறும் ஏறத்தாழ இரண்டாயிரம் கல்விக்கனிகளை நாடு நலம் பெற நல்குகிறது. 1998ல் தன்னாட்சி பெற்ற இக்கல்லூரி அறிவியலோடு அறவியலையும் மொழியோடு மனையியலையும் சரித்திரத்தோடு சாதனைகளையும் கணிதத்தோடு கணினியையும் வணிகவியலையும் வணிக நிர்வாகவியலையும் இளைய இந்தியாவிற்கு வழங்கி இனிய இந்தியாவை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. மேலும் மாணவிகளின் ஆய்வு தாகத்திற்கு வழிகாட்டும் ஒளிகாட்டியாகவும் இக்கல்லூரி திகழ்கிறது.

மீனாட்சி கல்லூரியின் அகத்தர மதிப்பீட்டுக் குழுவின் கீழ் இயங்கி வரும் பல குழுக்கள் சமுதாயச் சேவைகளை ஆற்றுவதோடு திறன் மேம்பாட்டுத் தேவைகளையும் ஆராய்ந்து சீரிய முறையில் செயலாற்றி 4[ஆவது] **NAAC** சுற்று தரமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்து **B++** பெற்றுள்ளது.

முன்னைப் பழமைக்கும், முடிவிலாப் பெருமைக்கும் உரிய எம் கல்லூரி 1965ல் ஆரம்பிக்கப்பட்டு 59 ஆண்டுகளாக உலகளாவிய கல்வியின் போக்கு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் தேவைக்கேற்ப அவ்வப்போது மாற்றப்படும் பாடத்திட்டம், கொரோனா காலங்களிலும் இணைய வழியாக நடத்தப்பட்ட வகுப்புகளோடு, முத்தாய்ப்பான மீனாட்சி இணையதளம், இணையவழி மென்பொருள் ஊக்கப்பயிற்சி வகுப்புகள், மாணவியரின் நலன் கருதி ஆற்றல் மிகு ஆசான்களின் வழியில் பன்முக வளர்ச்சிக்கென திறம்படச் செயல்படும் **NSS, NCC, YRC, Science Forum, Career Guidance Cell, Enterpreneurship Cell, NICHE Club** போன்ற திறன் வளர்க்கும் திட்டங்களின் துணையோடு செயல்பட்டு வருகிறது.

விவேகத்தில் மட்டுமல்ல எம்மங்கையர் வீரத்திலும் தீரம் கொண்டு, விளையாட்டிலும் தடம் பதித்து தேசிய அளவிலான போட்டியில் கலந்து கொண்டு பரிசுகளை வென்று பெருமை சேர்த்து வருகின்றனர்.

இந்தியா வல்லரசாக வழி சொன்ன கலாமின் மொழி பயின்ற எம்மாணவிகள் தங்கள் கனவின் கருவிற்கு உருகொடுத்து ஓவியமாக்கி உயிர் கொடுத்து காவியமாக்கிக் காண்பவரின் கருத்துக்கும் சிந்தைக்கும் புதுமையைப் பரிசாக்கியிருக்கிறார்கள். பக்கங்களை வாசித்துப் புதிய பரிமாணங்களை நேசிப்போம்,

ஆசிரியர் குழு

# 2023 - 2024 கல்வியாண்டின் ஆண்டறிக்கை

முத்தமிழ் கோலோச்சும் பொதிகைத் தென்றல் தவழும் கூடல் மாநகரின் தமிழமுதம் பொங்கும் வைகை வடகரையில் பெண்களின் உயர்கல்வியில் ஒப்பற்ற தடம் பதித்து வரும் எம் ஸ்ரீ மீனாட்சி அரசினா் மகளிா் கலைக் கல்லூரியின் 2023-2024ஆம் கல்வியாண்டின் ஆண்டறிக்கை.

இக்கல்லூரி 1965ஆம் ஆண்டு 320 மாணவிகள், 13 பேராசியா்கள், 13 அலுவலகப் பணியாளா்களுடன் செயல்படத் தொடங்கி, 59 ஆண்டுகளாகத் திறம்படச் செயல்பட்டு வருகிறது. 2023-2024ஆம் கல்வியாண்டில் சுமாா் 4700க்கு மேற்பட்ட மாணவியா்கள், 154 பேராசிரியா்கள், 1 நூலகா், 1 உடற்கல்வி இயக்குநா், 51 கௌரவ விரிவுரையாளா்கள், பெற்றோா் ஆசிரியா் கழகத்தில் ஆசிரியா்கள் மற்றும் அலுவலகப் பணியாளா்கள் உள்பட 22 பேருடனும், 6 ஆய்வக உதவியாளா்கள், 24 அலுவலகப் பணியாளா்கள் மற்றும் 15 இளநிலை, 15 முதுநிலை, 4 ஆராய்ச்சி பட்டப் படிப்புகளுடன் இக்கல்லூரி தென் தமிழகத்தில் பெண்களுக்கான மாபெரும் அரசு கலைக்கல்லூரியாக, இரு சுழற்சிகளில் செயல்பட்டு வருகின்றது.

இக்கல்லூரி 1998ஆம் ஆண்டு தன்னாட்சி தகுதியினைப் பெற்றதுடன் தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவினரால் நான்காம் சுழற்சியில் “B++” தரச்சான்றும் பெற்று “அறிவே ஆற்றல்” என்ற உன்னத நோக்கோடு பல்வேறு துறைகளில் தமது முத்திரையைப் பதித்துக் கொண்டிருக்கிறது.

இக்கல்லூரியின் செயல்பாட்டினை முன்னெடுத்துச் செல்வதில் கல்லூரியின் தலைவராகப் பொறுப்பேற்ற நாள் (02.07.2018) முதல் இன்றுவரை முனைப்புடன் செயல்படும் முதல்வா், சீராக வழிநடத்தும் துறைத்தலைவா்கள் மற்றும் அா்ப்பணிப்புடன் செயல்படும் பேராசிரியா்களின் பணி அளப்பரியது. மாணவியா் வளா்ச்சியில் கல்லூரிப் பேரவையின் பங்கு மகத்தானது. இக்கல்வியாண்டில் கல்லூரிப் பேரவை, முதல்வா் முனைவா்.சூ.வானதி அவா்களைத் தலைவராகவும், தமிழ்த்துறைத் தலைவா் முனைவா்.சு.சந்திரா அவா்களைப் பேரவைத் துணைத்தலைவராகவும் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

பேரவையின் மாணவப் பிரதிநிதியாக விலங்கியல்துறை மூன்றாமாண்டு ஆங்கிலவழி மாணவி செல்வி சி.ரம்யா தோ்வு செய்யப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறாா். அனைத்துத் துறைப் பேராசிரியா்கள் மற்றும் அலுவலகப் பணியாளா்கள் ஒன்றிணைந்து நன்முறையில் கடமையாற்றி, இக்கல்லூரி மாட்சிமை நிறைந்த கல்லூரியாக உருவெடுக்க உறுதுணையாக இருந்து வருகின்றனா்.

இக்கல்லூரியில் சிறப்பாக பணியாற்றிய ஆங்கிலத்துறை இணைப்பேராசிரியா் திருமதி வெ. நளினி விருப்பஓய்வு பெற்றுள்ளாா். மேலும் அரசுப்பணி நிறைவின் காரணமாக இக்கல்வியாண்டில் புவியியல் துறையைச் சாா்ந்த துறைத்தலைவா் திருமதி நா.போதுமணி மற்றும் இணைப்பேராசிரியா் திருமதி மு.சிராசுனிசா பேகம், வணிகவியல் துறைத்தலைவா் முனைவா் பா.கஸ்தூரி ராணி, பொருளியல் துறையைச் சாா்ந்த இணைப்பேராசிரியா்கள் முனைவா் ப.ராசமகேந்திரன், முனைவா் சு.குமாரி ஜனனி, ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியா் முனைவா் நீ.மீனாட்சி, வேதியியல் துறையைச் சாா்ந்த உதவிப்பேராசிரியா்கள் முனைவா் அ.ஜோஸ்பின் வனிதா, முனைவா் கொ.இளங்கோவன், விலங்கியல் துறை உதவிப்பேராசிரியா் முனைவா் ச.மாலா, ஆகியோா் ஓய்வு பெற்றுள்ளனா். இவா்களுடைய ஓய்வறியாத பணி பாராட்டுதலுக்குரியது.

இக்கல்வியாண்டில் வேதியியல் துறையின் துறைத்தலைவர் முனைவர் கி.விக்னேஸ்வரி, கணினி பயன்பாட்டியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அ.விஜயா ஆகியோருக்கு “அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை” நல்லாசிரியர் விருதினை வழங்கியுள்ளது. தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சை.ஜெஸிமா, கோவை வசந்தவாசல் கவிமன்றம் சார்பாக கவித்தென்றல் விருது பெற்றுள்ளார்.

### முனைவர் பட்டம்

இக்கல்வியாண்டில் முனைவர் பட்டம் பெற்று தமக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்த பேராசிரியர்கள். ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் திருமதி.ஜா.ஷாகின் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலும் கௌரவ விரிவுரையாளராகப் பணியாற்றும் திருமதி. பா.பிருந்தா இவாஞ்சலின் ராணி மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்திலும் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

கணினி அறிவியல் துறையைச் சார்ந்த இணைப்பேராசிரியர் முனைவர் ச.சுகுணா அவர்களின் வழிகாட்டுதலின்கீழ் அத்துறையைச் சார்ந்த உதவிப்பேராசிரியர் திருமதி.கோ.சுதா தனது முனைவர் பட்டத்திற்கான வாய்மொழித் தேர்வினை நிறைவு செய்துள்ளார்.
கணிதத்துறையைச் சார்ந்த இணைப்பேராசிரியர் முனைவர் திருமதி.சு.தேவிபாலா அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், நமது கல்லூரி கௌரவ விரிவுரையாளர் திருமதி.பா.மாலினி தேவி முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

நமது கல்லூரியில் பணியாற்றும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு ஆய்வு நெறியாளர்களாகச் செயல்பட்டு வருகின்றனர் என்பது கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது.

### ஆய்வுக்கட்டுரை வழங்கல்

மலேசியாவில் நடைபெற்ற 11ஆவது உலகத்தமிழ்ச் சங்க மாநாட்டில் முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் மீ.முத்துராணி அவர்கள் கருத்தரங்கத் தலைவராகப் பங்கேற்று “உலகைக் காக்க வள்ளுவர் கூறும் காப்பு” என்ற தலைப்பில் கட்டுரை வழங்கினார்.

இம்மாநாட்டில் முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சை.ஜெஸிமா “குருநானக் எனும் ஆளுமை'' எனும் தலைப்பிலும், கௌரவ விரிவுரையாளர்கள் முனைவர் பி.கார்த்திகா “பரிமேலழகரின் திருக்குறள் உரைவளம்” எனும் தலைப்பிலும், முனைவர் அ.யோகேஸ்வரி “திரு.வி.க.வின் மொழி ஆளுமை” எனும் தலைப்பிலும் கட்டுரைகள் வழங்கினார்கள்.

இம்மாநாட்டில் வேதியியல் துறையைச் சார்ந்த இணைப்பேராசிரியர் முனைவர் திருமதி.ரெ.முத்துச்செல்வி அவர்கள் “உளவியல் வேதியியல்” என்ற தலைப்பிலும், வேதியியல் துறையைச் சார்ந்த இணைப்பேராசிரியர் முனைவர் நா.மனோன்மணி அவர்களும், விலங்கியல் துறையைச் சார்ந்த உதவிப்பேராசிரியர்கள் முனைவர் ந.அமுதா, செ.ராணிவிஜயா ஆகியோரும் மலேசியப் பல்கலைக்கழகத்தில் பதினொன்றாவது உலகத்தமிழ்ச் சங்க மாநாட்டில் தங்கள் கட்டுரைகளை வழங்கியுள்ளனர்.

கல்லூரிப் பேராசிரியர்கள் பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்குகளிலும், தேசியக்கருத்தரங்குகளிலும், சர்வதேச ஆய்வு இதழ்களிலும் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிக் கல்லூரிக்கு சிறப்பு சேர்த்துள்ளனர்.

### வெளியிட்ட நூல்கள்

முனைவர் ம.சுமதி, கணினி அறிவியல் துறைத்தலைவர் மற்றும் இணைப்பேராசிரியை “கணினி வளர்ந்த கதை” எனும் நூலையும், கணினி பயன்பாட்டியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் மீ.கனகதுர்கா "Security and Privacy in Cloud" எனும் நூலையும், முனைவர் நா.ஆனந்தி “மேம்பட்ட ஆராய்ச்சி முறை” என்ற நூலையும், முனைவர் ஆ.துரைக்கண்ணன் “மார்க்கெட்டிங் மேனேஜ்மண்ட்” என்ற நூலையும், முனைவர் பா.செல்வவீரகுமார் “நிறுவனங்கள் மற்றும் சந்தைகள்” என்ற நூலையும் இக்கல்வியாண்டில் வெளியிட்டுத் தமக்கும், கல்லூரிக்கும் சிறப்பாக தனித்துவத்தை வழங்கியுள்ளனர்.

### சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றல்

முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறைத் தலைவர் முனைவர் சு.சந்திரா அவர்கள் மதுரைக் கல்லூரி தமிழ்த்துறையில் நடைபெற்ற கம்பராமாயணம் சுந்தர காண்டம் சான்றிதழ்க் கல்வி வகுப்பிலும், கச்சைகட்டி. அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழ்மன்றம் சார்பில் நடைபெற்ற தமிழ்க்கடல் விழாவிலும் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று சொற்பொழிவாற்றினார்.

முனைவர் அ.வளர்மதி - செந்தமிழ் கல்லூரியில் நடைபெற்ற பெண்கள் தின விழாவிலும், முனைவர் இரா.பிரியதர்ஷினி மதுரை பாத்திமா கல்லூரி, மதுரை நாட்டு நலப்பணித்திட்ட கூட்டத்தில் “உணர்வு மேலாண்மை” என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினர்.

கணிதத் துறையைச் சார்ந்த திருமதி ரா.அ.லதாதேவி மதுரை அருள் ஆனந்தர் கல்லூரியிலும், இணைப்பேராசிரியை முனைவர். சு.தேவிபாலா மதுரை யாதவா பெண்கள் கல்லூரியிலும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

முனைவர் கி. விக்னேஸ்வரி அவர்கள் அரசு கலைக்கல்லூரி ஆண்டிப்பட்டியில் சுதந்திர தின உரையும், சாத்தூர் S.R.N.M கல்லூரியிலும், மதுரை மங்கையர்கரசி கல்லூரியிலும், மதுரை SBOA பள்ளியில் மகளிர் தினவிழாவிலும் சிறப்புரையாற்றினார்.

கணினிபயன்பாட்டியல் துறைத்தலைவர் முனைவர். அ. விஜயா அரசு கலைக் கல்லூரி, பர்கூரில் சிறப்பு பேச்சாளராக பங்கேற்றார்.

**தேசியக் கருத்தரங்கம்**

19.01.2024 அன்று முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை சார்பாக "தமிழ் இலக்கியத்தில் கலைகள்" எனும் பொருண்மையில் ஒரு நாள் தேசியக் கருத்தரங்கம் நடைபெற்றது. முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறைத்தலைவர் முனைவர்.சு.சந்திரா அவர்களும், உதவிப்பேராசிரியர்கள் முனைவர் அ.வளர்மதி, முனைவர்.இரா.பிரியதர்ஷினி ஆகியோர் இக்கருத்தரங்கத்தின் ஒருங்கிணைப் பாளர்களாக செயல்பட்டனர்.

**பன்னாட்டுக் கருத்தரங்கம்**

05.01.2024 அன்று பன்னாட்டு கருத்தரங்கம் வேதியியல் துறையினால் நடத்தப்பட்டது. மலேசியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் Dr. வெங்கடேஷ் பெரியசாமி அவர்கள் கலந்து கொண்டு **உயிர் மூலக்கூறுகளுக்கும் மின்னணுவியலுக்கும்** உள்ள தொடர்பைப் பற்றி விளக்கியதுடன், மருத்துவ உபகரணங்களை உருவாக்குவதன் மூலம் சமுதாயத்திற்குத் தொண்டு புரியும் விதத்தினை எடுத்துரைத்தார். மேலும் மலேசியா பல்கலைக்கழக பேராசிரியர் Dr. Lim Lian Kuano அவர்கள் இணைய வாயிலாக கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். வேதியியல் மற்றும் அதைச் சார்ந்த தொழில் முனைவாக்கம் பற்றிய சிறப்புச் சிந்தனையை Mr.தீபக்குமார் அவர்கள் விளக்கினார்கள்.

**மாணவர்களுக்கான ஆய்வுத்திட்டம் (TNSCST Student Project)**

உதவிப்பேராசிரியர் முனைவர். பி.இந்திராதேவி "Effect of Shock waves on perovskite LaCoO3 oxide for Super Conductors" என்ற தலைப்பில் TNSCST-Student Project Scheme-ல் Rs.7500/- பெற்றது குறிப்பிடத்தக்கது.

**கூடுதல் வகுப்பறைகள்**

அரசின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் ரூ.299 இலட்சம் செலவில் 16 வகுப்பறைகள் புதிதாக கட்டப்பட்டு மாணவியரின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. இந்நிகழ்வு கல்லூரியின் கட்டுமான வளர்ச்சியின் மற்றொரு மைல் கல்லாகும்.

**வேலை வாய்ப்புகள்**

மூன்றாம் ஆண்டு இளநிலை வேதியியல் ஆங்கில வழி பயிலும் மாணவி S.அரிமீனாட்சி SSC தேர்வில் தேர்ச்சி பெற்று அரசுப் பணியில் சேரும் வாய்ப்பினைப் பெற்றுள்ளார். 09.02.2024 அன்று மதுரை ஆரோ ஆய்வகத்தில் வேலைவாய்ப்பு பெறுவதற்கான நேர்முகத் தேர்வில் எம்மாணவியர் ஆர்வமுடன் கலந்து கொண்டு 19 மாணவிகள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

நான்கு கணினி அறிவியல் துறை மாணவர்கள் BS டெக்னாலஜியில் வலை மற்றும் PHP நிரல் உருவாக்குநர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் நான் முதல்வன் ஏற்பாட்டின் கீழ், 100 மாணவர்களில் 6 பேர் ஸ்கவுட் ஸ்காலர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் பிரிட்டிஷ் கவுன்சிலும் சேர்ந்தும் நான்முதல்வன் திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கு SCOUT SCHOLARSHIP Programme I அறிவித்ததில் நமது கல்லூரியில் இருந்து 26 கணினி அறிவியல் துறை மாணவிகள் & 2 கணினி பயன்பாட்டியல் துறையைச் சார்ந்த மாணவிகள் - 28 மாணவிகளில் கணினி அறிவியல் துறையின் 6 மாணவிகள் (P.காயத்ரி, J.நவீனா, சு. பிரதிக்ஷா, மு.சக்திபிரியதர்ஷினி, சிவரஞ்சனி, வித்யா) மூன்றாம் நிலைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## தேர்ச்சி விபரம் [ஏப்ரல் 2022 - 2023]

| வ. எண் | பாடப்பிரிவு | ஆங்கில வழி / தமிழ் வழி | இளநிலை | முதுநிலை |
|---|---|---|---|---|
| 1 | வரலாறு | ஆங்கில வழி | *100 %* | *96.77 %* |
| | | தமிழ் வழி | *98.25%* | |
| 2 | பொருளாதாரம் | ஆங்கில வழி | *98.33 %* | *88.24 %* |
| | | தமிழ் வழி | *96.97 %* | |
| 3 | ஆங்கிலம் | முதல் சுழற்சி | *98.51%* | *100 %* |
| | | இரண்டாம் சுழற்சி | *75%* | |
| 4 | தமிழ் | முதல் சுழற்சி | *96.72%* | *95.83%* |
| | | இரண்டாம் சுழற்சி | *91.8%* | |
| 5 | வணிகவியல் | முதல் சுழற்சி | *100%* | *100 %* |
| | | இரண்டாம் சுழற்சி | *96.83%* | |
| 6 | கணிதவியல் | முதல் சுழற்சி ஆங்கில வழி<br>முதல் சுழற்சி தமிழ் வழி | *100%*<br>*92.5%* | *97.14 %* |
| | | இரண்டாம் சுழற்சி ஆங்கில வழி | *100%* | |
| 7 | இயற்பியல் | ஆங்கில வழி | *80.77%* | *100 %* |
| | | தமிழ் வழி | *81.48%* | |
| 8 | வேதியியல் | ஆங்கில வழி | *94.44%* | *100 %* |
| | | தமிழ் வழி | *81.08%* | |
| 9 | விலங்கியல் | ஆங்கில வழி | *90.63%* | *80.95 %* |
| | | தமிழ் வழி | *93.94%* | |
| 10 | புவியியல் | ஆங்கில வழி | *92.11%* | *94.74 %* |
| | | தமிழ் வழி | *97.44%* | |
| 11 | மனையறிவியல் | முதல் சுழற்சி | *77.27%* | *100 %* |
| 12 | கணினி அறிவியல் | முதல் சுழற்சி | *100%* | *100 %* |
| | | இரண்டாம் சுழற்சி | *100%* | |
| 13 | தாவரவியல் | ஆங்கில வழி | *94.29%* | *100 %* |
| 14 | கணினி பயன்பாட்டியல் | ஆங்கில வழி | *97.73%* | *100 %* |
| 15 | வணிக நிர்வாகவியல் | ஆங்கில வழி | *85.25%* | *96.30%* |

**புத்தாக்கப் பயிற்சி**

இக்கல்வியாண்டில் பேராசிரியர்கள் புத்தாக்கப் பயிற்சியில் கலந்து கொண்டு தங்களை மேம்படுத்திக் கொண்டுள்ளனர்.

| பேராசிரியர்கள் | பல்கலைக்கழகம் | பயிற்சி | நாள் |
|---|---|---|---|
| முனைவர் இரா.பிரியதர்ஷினி | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | புத்தாக்கப் பயிற்சி | 21.07.2023-03.08.2023 |
| முனைவர் கோ.விஜெயம் | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | புத்தாக்கப் பயிற்சி | 17.03.2023-30.03.2023 |
| முனைவர் சை.ஜெஸிமா | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | புத்தாக்கப் பயிற்சி | 17.03.2023-30.03.2023 |
| முனைவர் கி.விக்னேஸ்வரி | இராமனுஜம் கல்லூரி புதுடெல்லி | புத்தாக்கப் பயிற்சி-இணைய வழி | 05.12.2023-29.12.2023 |
| முனைவர் ந.மனோன்மணி | இராமனுஜம் கல்லூரி புதுடெல்லி | புத்தாக்கப் பயிற்சி-இணைய வழி | 05.12.2023-29.12.2023 |
| முனைவர் பூ.சாந்தி | இராமனுஜம் கல்லூரி புதுடெல்லி | புத்தாக்கப் பயிற்சி-இணைய வழி | 05.12.2023-29.12.2023 |
| முனைவர். அ.பியூலாமேரி | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | புத்தாக்கப் பயிற்சி-இணைய வழி | 06.03.2024-19.03.2024 |
| முனைவர். பி.இந்திராதேவி | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | புத்தாக்கப் பயிற்சி-இணைய வழி | 06.03.2024-19.03.2024 |
| திருமதி து.ருக்மணிதேவி | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | புத்தாக்கப் பயிற்சி | 16.02.2024-29.02.2024 |
| திருமதி கோ.சுதா | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | புத்தாக்கப் பயிற்சி | 15.11.2023-28.11.2023 |
| முனைவர் து.ஆறுமுகக்கனி | இராமனுஜம் கல்லூரி, டெல்லி பல்கலைக்கழகம் | புத்தாக்கப் பயிற்சி-இணைய வழி | 13.07.2023-26.07.2023 |
| முனைவர் சு.தேவிபாலா | இராமனுஜம் கல்லூரி, டெல்லி பல்கலைக்கழகம் | புத்தாக்கப் பயிற்சி-இணைய வழி | 13.07.2023-26.07.2023 |

மேலும், 50க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**புரிந்துணர்வு பயன்பாடு பயிலரங்கம்**

25.08.2023 அன்று நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியில் ஒரு நாள் தேசியப் படைப்பிலக்கியப் பயிலரங்கம் நடைபெற்றது. 18 மாணவிகள் இப்பயிலரங்கில் கலந்து கொண்டனர்.

நமது கல்லூரியில் முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை & திருநாவுக்கரசர் இசைஆராய்ச்சி மற்றும் இசைக்கல்வி அறக்கட்டளையுடன் இணைந்து 26.02.2024, 27.02.2024 ஆகிய இரண்டு நாள் தமிழ் இசைப் பயிலரங்கத்தினை நடத்தியது.

**பயிற்சி வகுப்புகள்**

அருணாச்சலம் ஜேசுதாஸ் அறக்கட்டளை, இளங்கலை தமிழ் மூன்றாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவியர்களுக்கு ஆங்கிலம் மற்றும் கணினி பயிற்சி வகுப்புகளை நடத்தியது. பயிற்சி பெற்ற மாணவியர்களுக்கு 08.12.2023 அன்று முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறையில் அறக்கட்டளையின் சார்பாக பேராசிரியர் பத்மஸ்ரீ சாலமன்பாப்பையா அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் 27.10.2023 அன்று நடைபெற்ற சுயதொழில் வேலைவாய்ப்பு நிகழ்வில் கைத்தொழில் பயிற்சியில் முதுகலைத் தமிழ் மாணவியர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

## புதுமைப் பெண் திட்டம்

புதுமைப்பெண் திட்டமானது அரசுப் பள்ளிகளில் இருந்து உயர்கல்வி பயிலச்செல்லும் பெண்களின் உயர்கல்வியை உறுதி செய்யும் நோக்கில் தமிழக அரசால் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் பெயரால் துவங்கப்பட்டது. இத்திட்டத்தின் படி அரசுப்பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயின்ற பெண் குழந்தைகளுக்கு உயர்கல்வி உதவித் தொகையாக மாதம் ரூ.1000/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நமது கல்லூரியில் 2023-2024 கல்வியாண்டில் 464 மாணவியர் உதவித்தொகை பெற்று வருகின்றனர். இப்பணியினை கல்லூரி முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, முனைவர். கு.சுஜாதா, கணினி அறிவியல துறை இணைப்பேராசிரியர் முனைவர். இரா. பரிமளம், வேதியியல் துறை உதவிப்பேராசிரியை, திருமதி க.பரமேஸ்வரி, கணிதத்துறை உதவிப்பேராசிரியை மற்றும் முனைவர். அ. ஜோஸ்பின் வனிதா வேதியியல் துறை உதவிப்பேராசிரியை ஒருங்கிணைத்து வருகின்றனர். .

## நான் முதல்வன் திட்டம்

நான் முதல்வன் திட்டக்குழுவில் முதல்வர் முனைவர்.சூ.வானதி அவர்கள் தலைவராகவும் வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர் முனைவர் இரெ.சத்தியபாமா ஒருங்கிணைப்பாளராகவும் மற்றும் வணிகநிர்வாகவியல் துறையை சார்ந்த இணைப்பேராசிரியர் முனைவர் ஆ.துரைகண்ணன் & கணிதத் துறையை சார்ந்த உதவிப்பேராசிரியர் முனைவர் ச.சந்திரசேகர் அவர்களின் ஒத்துழைப்புடன் இக்குழு செயல்பட்டுவருகிறது.

2023-24 ஆம் கல்வியாண்டில் இளங்கலை மற்றும் இளம்அறிவியல் மாணவிகளின் முதல், மூன்றாம் மற்றும் ஐந்தாம் பருவத்திற்கு நான்முதல்வன் திட்டத்தில் மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி துவங்கியது. அதன் தொடர்பாக நான் முதல்வன் பாடத்திட்டத்தை இணைக்கும் கூட்டத்தில் (TANSCHE) முதல்வர் பிரதிநிதியாக மனையியல் துறைத்தலைவர் முனைவர் ஜ.பெ.ஷர்மிளா அவர்களும், நான் முதல்வன் ஒருங்கிணைப்பாளராக முனைவர்.இரெ.சத்தியபாமா அவர்களும் சென்னையில் 14.7.2023 அன்று கலந்து கொண்டனர்.

இரு பருவங்களிலும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் பேராசிரியர்களுக்கு Faculty Development Programme மூன்று கட்டங்களாக நடத்தப்பட்டது. ஏறத்தாழ 30 பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். முதலாம் ஆண்டு மாணவிகளுக்கு Language Skills for Employability, இரண்டாம் ஆண்டு மாணவிகளுக்கு Digital Skills for Employability மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவிகளுக்கு அவர்களின் துறைக்கு ஏற்ப வேலைவாய்ப்புடன் கூடிய பாடத் திட்டத்தினை வழங்கியது. செப்டம்பர் 01.09.2023 அன்று மாநில நான் முதல்வன் ஒருங்கிணைப்பாளர் திரு கல்யாணகுமார் அவர்கள் பேராசிரியர்களிடமும் மாணவியர்களிடமும் புதிய பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துவது பற்றி கலந்துரையாடினர்.

22.1.2024 அன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் (CEG Campus)நான் முதல்வன் Special Programme Implementation Department (SPID)செயலாளருடன் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் வணிக நிர்வாகவியல் துறையை சார்ந்த மூன்றாம் ஆண்டு ஜெயகலா & கணினி அறிவியல் துறையை சார்ந்த இரண்டாம் ஆண்டு, ஸ்ரீபாலா ஆகிய இரண்டு மாணவிகள் கலந்து கொண்டனர். மேலும், இரண்டாம், நான்காம் & ஆறாம் பருவத்திலும் கல்லூரி மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியை நான் முதல்வன் பாடத்திட்டத்தில் இணைப்பதற்கான நிகழ்வு (TANSCHE) 23.1.2024 அன்று சென்னையில் நடைபெற்றது

## காந்தியச் சிந்தனை கல்வி

2023-2024ஆம் கல்வியாண்டில் காந்தியச் சிந்தனை ஒருங்கிணைப்பாளராக கணிதத் துறையைச் சார்ந்த முனைவர். கு.முத்துபாண்டியன், இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் அவர்கள் செயல்பட்டு வருகின்றார். காந்தியச் சிந்தனைச் சான்றிதழ் படிப்பிற்கான தேர்வினை 666 மாணவியர்களும், பட்டயச் சான்றிதழ் படிப்பிற்கான தேர்வினை 589 மாணவியர்களும் பதிவுசெய்து எழுதியுள்ளனர். 2024ஆம் ஆண்டில் மதுரை, காந்தி நினைவு அருங்காட்சியகத்தின், சிறப்பு கல்வி அலுவலர், திரு.நடராசன், அவர்கள் காந்தியச் சிந்தனை சிறப்பு வகுப்பினை 06.03.2024,மற்றும் 07.03.2024 ஆகிய இரண்டு நாட்கள் நடத்தினார்.

## காந்தியச் சிந்தனை தேர்ச்சி விபரம் (2022 - 2023)

2022 - 2023 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைப்பாளர்களாக வணிகவியல் துறையை சார்ந்த இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர் பா.கஸ்தூரி ராணி மற்றும் அத்துறையின் அனைத்து பேராசிரியர்களும் செயல்பட்டனர்.

| வ. எண். | பாடப்பிரிவு | பதிவு செய்தவர்கள் | தேர்வு எழுதியவர்கள் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | CGT | 1007 | 991 | 240 | 444 | 276 | 96.87% |
| 2. | DGT | 440 | 436 | 176 | 208 | 44 | 98.17% |
| | Total | 1447 | 1427 | | | | |

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் நடத்திய காந்தியச் சிந்தனைச் சான்றிதழ் தேர்வில் முதல் இடத்தையும், காந்தியச் சிந்தனைப் பட்டயச் சான்றிதழ் தேர்வில் இரண்டாம் இடத்தையும் நமது கல்லூரி பெற்றது.

காந்தியச் சிந்தனைப் பட்டயச் சான்றிதழ் தேர்வில் .M.பவித்ரா மூன்றாமாண்டு வேதியியல் துறை (தமிழ் வழி) மாணவி முதல் இடத்தை பெற்று நம் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

## கல்வி உதவித்தொகை

| வ.எண் | உதவித்தொகை பெயர் | பயன்பெறும் மாணவிகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை |
|---|---|---|---|
| 1 | பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் கல்வி உதவித்தொகை | 2760 | Rs.8,602,702 |
| 2 | மாற்றுத்திறனாளிகள் கல்வி உதவித்தொகை | 35 | Rs.4,30,000 |
| 3 | தாழ்த்தப்பட்டோர் கல்வி ஊக்கத்தொகை | 963 | Rs.4,670,780 |
| 4 | தமிழ் வழிக் கல்வி ஊக்கத்தொகை | 361 | Rs.3,06,900 |
| 5 | இதர வகையிலான கல்வி உதவித்தொகை | 136 | Rs.48,960 |

## உடற்கல்வித்துறை

நமது கல்லூரி விளையாட்டுக்குழு, கல்லூரி முதல்வர், முனைவர் திருமதி. சூ.வானதி அவர்கள் தலைமையிலும் விளையாட்டுக்குழு உறுப்பினர்களின் ஆலோசனைகளோடும் சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது.

**விளையாட்டுக்குழு உறுப்பினர்கள்**

தலைவர் : முனைவர். திருமதி. சூ.வானதி - முதல்வர்

செயலாளர் : முனைவர்.திரு. செ.ரமேஷ் - உடற்கல்வி இயக்குநர்

உறுப்பினர்கள்:

1. முனைவர் திருமதி. அ.பியூலா மேரி - உதவிப் பேராசிரியர், இயற்பியல் துறை
2. முனைவர். திருமதி.வே. இந்திராதேவி - உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை
3. முனைவர். திரு. பா.செல்வ வீரகுமார் - உதவிப் பேராசிரியர், வணிக நிர்வாகவியல் துறை
4. செல்வி. க. சக்திமாரி – விளையாட்டு மாணவச் செயலாளர்

இக்கல்வியாண்டின் தொடக்கத்தில் மாணவியர் சேர்க்கையின் போது விளையாட்டில் தனித்திறமை பெற்ற மாணவியருக்கு முன்னுரிமை அளித்து சிறப்பு இட ஒதுக்கீட்டின்படி இளநிலை கலை மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு 3% விழுக்காடு ஒதுக்கீடும், முதுநிலை கலை மற்றும் அறிவியல் பாடப்பிரிவிற்கு 2% விழுக்காடு ஒதுக்கீடும் வழங்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் மாணவியர் சேர்க்கப்பட்டனர்.

**சர்வதேச அளவில்**

மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச அளவிலான **சிலம்பம்** போட்டியிலும், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற கராத்தே போட்டியிலும் மூன்றாம் ஆண்டு விலங்கியல் துறை மாணவி **தி.சுவேதா தங்கப்பதக்கம்** பெற்று கல்லூரிக்குப் பெருமையும், சிறப்பும் சேர்த்துள்ளார்.

**பல்கலைக்கழக அளவில்**

தென்மண்டல பல்கலைக்கழகங்களுக்கான கையுந்துப்பந்து போட்டியில் விளையாட இளங்கலை மூன்றாம் ஆண்டு தமிழ் பயிலும் **சே.நந்தினி**, கால்பந்து போட்டியில் விளையாட இளநிலை வேதியியல் துறை மாணவி **மு.காவியா,** இளநிலை மூன்றாம் ஆண்டு கணினிபயன்பாட்டியல் பயிலும் மாணவி **எஸ்.வித்யாஸ்ரீ** துப்பாக்கி சுடுதல் 10 மீட்டர் ஏர் ரைபில் போட்டியிலும், நீச்சல் போட்டியிலும், இரண்டாமாண்டு முதுநிலை இயற்பியல் துறை மாணவி **எஸ்.ஜோதிகா,** இளநிலை இரண்டாமாண்டு வேதியியல் துறை மாணவி **மு.ஆர்த்தி**, இளநிலை மூன்றாமாண்டு வணிகவியல் துறை மாணவி **அ.ஸ்வேதா** ஆகிய மூவரும் போட்டியில் வென்று மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிக்காக விளையாடத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

பளுதூக்கும் போட்டியில் மூன்றாம் ஆண்டு இளநிலை வணிகநிர்வாகவியல் துறை மாணவி **கே.சக்திமாரி**யும், பூப்பந்து போட்டியில் இரண்டாம் ஆண்டு இளநிலை வணிகவியல்துறை மாணவி **பி.அழகுமுத்து**வும் திறம்பட விளையாடி மதுரை காமராசர் பல்கலைக்கழக அணிக்காகத் தேர்வு பெற்றுள்ளனர்.

இளங்கலை மூன்றாம் ஆண்டு வரலாறு பயிலும் மாணவி **எஸ்.அன்னபூரணி** ஜிம்னாஸ்டிக் போட்டியில் முதலிடத்தைப் பெற்று சிறப்பாக விளையாடியதுடன் பஞ்சாப் மாநிலம் குருநானக்தேவ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கான ஜிம்னாஸ்டிக் போட்டியில் விளையாட மதுரை காமராசர் பல்கலைக்கழக அணிக்காக தேர்வு பெற்றதும் நமது கல்லூரிக்கு பெருமை சேர்ப்பதாகும்.

முதலாம் ஆண்டு வேதியியல்துறை மாணவி **எம். காயத்ரி** சென்னையில் உள்ள அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தென் மண்டல பல்கலைக்கழகங்களுக்கான சதுரங்கப் போட்டியில் விளையாட மதுரை காமராசர் பல்கலைக்கழக அணிக்காகத் தேர்வு பெற்றார்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டி கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் கலந்து கொண்ட அனைத்து தனியார் கல்லூரிகளையும் வெற்றி பெற்று நமது கல்லூரி அணி சாம்பியன்ஸ் பட்டத்தைப் பெற்று வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியுள்ளது. இந்த நிகழ்வு அனைத்து அரசு மற்றும் தனியார் கல்லூரிகளின் கவனத்தையும் ஈர்த்தது. இப்போட்டியில் சிறப்பாக விளையாடியதற்காக நமது மாணவியர்களான மூன்றாம் ஆண்டு இளங்கலை வணிகவியல் மாணவி **ரா.பவித்ரா,** மூன்றாம் ஆண்டு இளங்கலை பொருளியல் மாணவி **அ.தாரிகா,** இரண்டாம் ஆண்டு இளங்கலை வணிக நிர்வாகவியல் மாணவி **செ.சந்தியா,** முதலாம் ஆண்டு இளங்கலை கணிதவியல மாணவி **ச.சந்தியா,** முதலாம் ஆண்டு இளங்கலை கணிதவியல் மாணவி **சி.சர்மிளா** சிறப்பாக விளையாடியதுடன் காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தென் மண்டல பல்கலைக்கழகங்களுக்கான கிரிக்கெட் போட்டியில் விளையாட மதுரை காமராசர் பல்கலைக்கழக அணிக்காகத் தேர்வு பெற்றனர்.

முதுநிலை இரண்டாம் ஆண்டு இயற்பியல் துறை மாணவி **ஜோதிகா**, இளநிலை இரண்டாம் ஆண்டு இயற்பியல் துறை மாணவி **ஆர்த்தி**, இளநிலை இரண்டாம் ஆண்டு வணிகவியல் துறை மாணவி **எ.சுவேதா**, இளநிலை மூன்றாம் ஆண்டு வணிகவியல் துறை மாணவி **பி.ஸ்ரீமதி** ஆகியோர்

தொடர் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டு முதலாம், இரண்டாம், மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளுக்கு இடையேயான ஜூடோ போட்டி அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் மூன்றாம் ஆண்டு இளநிலை வரலாறு பயிலும் மாணவி **பி.அமிர்தாதேவி 63கிலோ பிரிவில் இரண்டாமிடத்தையும்,** முதலாம் ஆண்டு இளநிலை பொருளியல் பயிலும் மாணவி ஆர்.**ஜெயபிரதா 48கிலோ பிரிவில் மூன்றாமிடத்தையும்** பெற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளது விளையாட்டுத்துறையில் முக்கிய மைல்கல்லாகும்.

பல்கலைக்கழக அளவில் பளுதூக்கும் மற்றும் வலுதூக்கும் போட்டியில் பல்வேறு எடைப் பிரிவுகளில் மூன்றாம் ஆண்டு இளநிலை வரலாற்றுத்துறை மாணவி ஜெ.நாகராணி, இரண்டாம் ஆண்டு இளநிலை ஆங்கிலத்துறை மாணவி எம்.ஹரிணி, மூன்றாம் ஆண்டு இளநிலை வணிகநிர்வாகவியல் மாணவி க.சக்திமாரி, இரண்டாம் ஆண்டு இளநிலை வணிகநிர்வாகவியல் மாணவி செ.சந்தியா ஆகியோர் பரிசுகளை வென்றுள்ளனர்.

பல்கலைக்கழக அளவில் அனைத்து கல்லூரிகளுக்குமிடையே தடகளப் போட்டியில் இளநிலை இரண்டாம் ஆண்டு தமிழ்த்துறை மாணவி **ஆர்.மகாசக்தி** நீளம்தாண்டுதல் போட்டியிலும், இளநிலை இரண்டாம் ஆண்டு பொருளியல்துறை **மாணவி எம்.வெள்ளையம்மாள்** 3000 மீட்டர் ஓட்டப் போட்டியிலும் கலந்து கொண்டு மூன்றாமிடம் பிடித்து நமது கல்லூரிக்குச் சிறப்பு சேர்த்துள்ளார்

**மாவட்ட அளவில்**

மாவட்ட அளவில் நடைபெற்ற பல்வேறு கையுந்துப் பந்து கிளப் நடத்திய பல்வேறு போட்டிகளில் பரிசுத்தொகையாக ரூ.5000/- மற்றும் ரூ.1000/- பெற்றுள்ளனர்.

மதிலகப் போட்டியின் முக்கிய நோக்கமாக கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் விளையாட்டில் பங்கு கொள்ளும் வாய்ப்பை வழங்குவதற்காக பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு ஊக்கப்படுத்தப்பட்டது. குறிப்பாக மாற்றுத்திறன் மாணவிகளுக்கும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

கபாடி, கையுந்துப்பந்து, கூடைப்பந்து, வளைகோல்பந்து, கோ கோ, பூப்பந்து, கைப்பந்து, கிரிக்கெட், இறகுப்பந்து, கால்பந்து, சதுரங்கம், யோகாசனம், மேசைப்பந்து, எறிபந்து ஆகிய 14 போட்டிகளும், தடகளப்போட்டியும், மாற்றுத்திறனாளிகளுக்கான குண்டெறிதல் போட்டிகளும் நடத்தப்பட்டன.

மாணவிகளிடையே ஆரோக்கியம் சார்ந்த விழிப்புணர்வைத் தங்கள் வாழ் நாள் முழுவதும் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கில் மாரத்தான் போட்டிகளில் பங்கேற்க ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.

29.07.2023 அன்று Tamil Nadu State Commission for Women, சார்பில் "Stop Violence Against Women" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட மாரத்தான் போட்டியில் மனையியல் துறையின் 28 மாணவிகள் கலந்து கொண்டு சான்றிதழ்கள் பெற்றனர்.

**நூலகம்**

எம் கல்லூரியில் ஒரு மைய நூலகமும், 15 துறை நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன. தற்போது நூலகத்தில் சுமார் 75,203 புத்தகங்கள், 200 ப்ராஜெக்ட் ரிப்போர்ட்ஸ், 25 பருவ இதழ்கள், 200 குறுந்தகடுகள், 5 செய்தித்தாள்கள் உள்ளன. அனைத்து புத்தகங்களும் Dewey Decimal Classification என்ற முறைப்படி பகுப்பாய்வு செய்யப்பட்டு, Bar-Code Label ஒட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு சிறந்த முறையில். அடுக்கி வைக்கப்பட்டு, பேராசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகின்றன.
அனைத்து மாணவியர்களுக்கும் பார்-கோடு லேபிள் (Bar-Code Label) ID CARD வழங்கப்பட்டு, நூலக மென்பொருள் (Library Management Software) மூலமாக புத்தகங்கள் வழங்கி திரும்பப் பெறப்படுகின்றன.

மைய நூலகத்தில் Automatic IN OUT Management System அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மைய நூலகத்தை பயன்படுத்த வரும் மாணவிகள் தங்களது அடையாள அட்டையை Scan செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த அடையாள அட்டையை அடிப்படையாகக்கொண்டு, நூலக மென்பொருள் (Library Management Software) மூலமாக நூல்கள் வழங்கித் திரும்பப் பெறப்படுகின்றன.

மாணவிகள் மைய நூலகத்தில் உள்ள புத்தகங்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக நூலக மென்பொருளில் OPAC (Online Public Access Catalogue) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எம் நூலகம் ஆண்டு சந்தா செலுத்தி INFLIBNET – N-LIST இல் உறுப்பினராக உள்ளது. இதன்மூலம் 6000 E-Journals மற்றும் 30,00,000 E-Books பார்த்து பதிவிறக்கம் செய்ய இயலும். மேலும் இவ்வசதியினை இணையதள (INTERNET) வசதியுள்ள எவ்விடத்திலிருந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம். மாணவியர்களை ஊக்குவிக்கும் விதமாக அனைத்து போட்டி தேர்வுகளுக்கு தேவையான புத்தகங்கள் மிக அதிக அளவில் வாங்கப்பட்டு மேற்கோள் பிரிவில் (Reference Section) மாணவியர்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. 2023-2024 கல்வியாண்டில் அரசு நிதி 2,00,000/- திற்கு அனைத்து துறைகளுக்கும் சுமார் 425 புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன.

**Information and Library Network** (INFLIBNET) ஆல் உருவாக்கப்பட்டுள்ள IRINS எனப்படும் web-based Research Information Management (RIM) service இல் அனைத்து பேராசிரியர்களின் Profile இணைக்கும் பணியானது நமது நூலகரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. IRINS,இல் நாம் இணைவது நமது பேராசிரியர்களின் ஆய்வுப் பணிகளை மேலும் ஊக்குவிப்பதாக அமையும் எனக் கருதப்படுகிறது.

**மாபெரும் தமிழ்க் கனவு**

அண்ணா நினைவு நாளில் “மாபெரும் தமிழ்க்கனவு” எனும் தலைப்பில் தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரைத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு கல்லூரிகளில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 17.08.2023 அன்று மதுரை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் ஒருங்கிணைப்பாளராக தமிழ்த்துறை கௌரவ விரிவுரையாளர்கள் முனைவர் பொ.பொற்செல்வி, முனைவர் தி.கௌரி ஆகியவர்களும் பங்கேற்பாளர்களாக இளங்கலைத் தமிழ்த்துறையில் 42 மாணவியரும், முதுகலையில் 8 மாணவியருமாக மொத்தம் 52 பேர் பங்கேற்றனர். நிகழ்வரங்கில் கொடுக்கப்பட்ட “தமிழ் பெருமிதம்” என்னும் புத்தகத்தை வாசித்து முதுகலை மாணவியர் கருத்துரைத்தனர். நிகழ்வின் சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சு.வெங்கடேசன் அவர்கள் கலந்து கொண்டு,“மாபெரும் தமிழ்க்கனவு – கீழடி நம் தாய்மடி” என்னும் தலைப்பில் உரையாற்றினார். மருத்துவக் கல்லூரியின் முதல்வர் வரவேற்புரை நல்க, மதுரை மாவட்ட ஆட்சியர் மா.சௌ. சங்கீதா அவர்கள் நோக்கவுரை ஆற்றினார். காலை 9.30 மணியளவில் நிகழ்வில் வருகைப்பதிவு செய்து கொண்டதற்கு பிறகு புத்தகக் கண்காட்சி மற்றும் பாரம்பரிய உணவுக் கண்காட்சி ஆகியவற்றை மாணவியர் கண்டுகளித்தனர். கேள்வி நேரத்தில் நம் கல்லூரி மாணவிகள் கேள்விகளை எழுப்பினர். சிறப்பு விருந்தினர் திரு.சு.வெங்கடேசன் பதிலளித்து ஊக்கப்படுத்தினார். நிறைவாக சிறப்பாக கருத்துரைத்த முதுகலை மாணவி கோ.சோலைராணிக்கும் சிறப்பான கேள்வி கேட்டமைக்காக முதுகலை மாணவி மு.ஆர்த்திக்கும் சான்றிதழ் மற்றும் புத்தகப் பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்வின் இறுதியாக மருத்துவக் கல்லூரியின் பேராசிரியை நன்றியுரை வழங்கினார்.

**ஆற்றலமுது - ஊட்டச்சத்து உணவுத் திட்டம்**

இவ்வாண்டு நிகழ்த்தப்பட்ட அனைத்து சாதனைகளுக்கும் மாணவியர்களுக்குப் பின்புலமாக இருந்து வலுவூட்டியது நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு சு.வெங்கடேசன் அவர்களால் வழிகாட்டப்பட்டு “தென்புலம் அறக்கட்டளை” சேர்மன் திரு.மதன் அவர்கள் மூலம் 65 மாணவியர்களுக்குக் கடந்த ஓராண்டு காலமாக வழங்கப்பட்டு வருகின்ற “ஆற்றலமுது” என்ற ஊட்டச்சத்து உணவுத்திட்டத்துக்குப் பெரும்பங்கு உண்டு என்பது மறுக்கவியலாத உண்மையாகும்.

**தேசிய மாணவர் படை**

நமது கல்லூரியில் முதல்வர் அவர்கள் தலைமையில் தேசிய மாணவர் அலுவலர் Capt. முனைவர்.ரெ.முத்துச்செல்வி இணைப்பேராசிரியர், வேதியியல் துறை அவர்களின் கீழ் தேசிய மாணவர் படை இயங்கி வருகிறது. இந்தக் கல்வியாண்டில் கல்லூரியின் NCC கோயின் ராணுவப் பிரிவில் 34 முதலாமாண்டு மாணவிகளும், 35 இரண்டாமாண்டு மாணவிகளும், மற்றும் 35 மூன்றாமாண்டு மாணவிகளும் மொத்தம் 104 மாணவிகள் உள்ளனர்.

என்.டி.ஏ இடையப்பட்டியில் 6.4.23 முதல் 15.4.23 வரை நடைபெற்ற வருடாந்திரப் பயிற்சி முகாமில் 30 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சார்ஜென்ட். எம்.சத்யப்பிரியா மற்றும் சார்ஜென்ட். பி.விமலஜோதி அகில இந்திய என்.சி.சி பெண்கள் மலையேற்ற பயணத்தில் 6.5.23 முதல் 13.5.23 வரை கலந்து கொண்டனர்.

இடையப்பட்டி என்.டி.ஏ.வில் 17.5.23 முதல் 26.5.23 வரை நடைபெற்ற TSC 2023 இடை அலகு போட்டி முகாமில் 08 மாணவர்களும், 16.6.23 முதல் 25.6.23 வரைநடை பெற்ற CATC மற்றும் TSC TRG II முகாமில் 25 மாணவர்களும், 17.7.23 முதல் 26.7.23 வரை நடைபெற்ற தேர்வுமுகாமில் 08 மாணவர்களும்,. 17.8.23 முதல் 26.8.23 வரை நடைபெற்ற IUC RDC TRG I முகாமில் 07 மாணவர்களும், 17.9.23 முதல் 26.9.23 வரை 05 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

NCC மாணவிகளால் சர்வதேச யோகா தினம் 21.6.2023 அன்று கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியில் 4.8.2023 அன்று நடைபெற்ற தேசியமாணவர் படை இயக்குநர் வருகை நிகழ்ச்சியில் ஏ.என்.ஓ மற்றும் 30 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

காந்தி அருங்காட்சியகத்தில் 27.9.23 அன்று எஸ். பி.டி - 23 ஏற்பாடு செய்யப்பட்டது ம்றும் அருங்காட்சியகத்தில் 50 கேடட்களால் தூய்மைப் பணி செய்யப்பட்டது.

இடையப்பட்டி என்.டி.ஏ.வில் 1.10.23 முதல் 10.10.23 வரை நடைபெற்ற சி.ஏ.டி.சி. மற்றும் ஆர்.டி.சி. குழு துவக்க முகாமில் மாணவ, மாணவிகளும், 21.10.23 முதல் 30.10.23 வரை CATC மற்றும் RDC IGC 2023 முகாமில் 05 மாணவர்களும் , 11.10.23 முதல் 20.10.23 வரை CATC மற்றும் RDC TRG I முகாமில் 03 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

ஸ்வச்பாரத் இயக்கத்தின் ஒரு பகுதியாக 1.10.23 அன்று ஷ்ரமதான் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அம்பிகா கல்லூரியில் சி.ஆர்.பி.எப் பைக் பேரணி 8.10.2023 அன்று கொடியசைத்து தொடங்கப்பட்டது, இதில் 10 மாணவியர் பங்கேற்றனர்.

எல் /சிபிஎல்எம். கீர்த்தனா 17.10.23 முதல் 2.11.23 வரை கெவாடியாவில் (குஜராத்) எஸ். என். ஐ.சி.யில் கலந்து கொண்டார்.

கோயம்புத்தூர் கே. பி.ஆர் இன்ஸ்டிடியூட் ஆப் இன்ஜினியரிங் அண்ட் டெக்னாலஜியில் 25.10.23 முதல் 5.11.13 வரை நடைபெற்ற அடிப்படை தலைமை முகாமில் ஏ.என்.ஓ மற்றும் 2 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

. 14.11.23 முதல் 23.11.23 வரை இடையப்பட்டி என்.டி.ஏ. வில் நடைபெற்ற CATC மற்றும் RDC TRG IIமுகாமில் CUO S. லத்திகா மற்றும் SUO பு. மேனகா, 24.11.23 முதல் 3.12.23 வரை, 8.12.23 முதல் 17.12.23 வரை, 18.12.23 முதல் 27.12.23 வரை ஆகிய நாட்களில் கலந்து கொண்டனர்.

யாதவா கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற என்.சி.சி. தின கொண்டாட்டம், மினி மராத்தான் பந்தய நிகழ்வில் 12 மாணவியர் மற்றும் ஏ.என்.ஓ பங்கேற்றனர்.

2023ஆம் ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்பட்டதால் சிறுதானியங்களைப் பற்றிய விழிப்புணர்வை இளைஞர்களிடையே ஏற்படுத்துவதற்கான ஒரு சிறப்புப் பிரச்சாரமாக 14.12.23 அன்று கட்டுரைப் போட்டியை மதுரை பி.என்.2 தமிழ்நாடு மாணவிகளுக்கு நடத்தினர்.

CQMS. எம். விமலஜோதி, சார்ஜென்ட். எம்.முத்துமீனா, எல்/சிபிஎல். எம். தரணி 18.1.2024 முதல் 29.1.2024 வரை என்.டி.ஏ இடையப்பட்டியில் நடந்த ஏக்பாரத் ஸ்ரேஷ்ட பாரத்-II முகாமில் கலந்து கொண்டார்.

3.3.24 அன்று C சான்றிதழ் தேர்வுக்கு 26 கேடட்கள் எழுதினர். அவர்கள் அனைவரும் தேர்வில் தேர்ச்சி பெற்றனர் என்பது கூடுதல் சிறப்பாகும்.

36 மாணவியர் 23.3.24 மற்றும் 24.3.24 ஆகிய தேதிகளில் B சான்றிதழ் தேர்வு எழுதியுள்ளனர்.

**நாட்டு நலப்பணித் திட்டம்**

எம் கல்லூரியில் 5 அலகுகளில் (51,52,53,54 மற்றும் 55) நாட்டு நலப்பணித் திட்டம் செயல்படுகிறது. ஒவ்வொரு அலகிலும் 100 மாணவியர் வீதம் மொத்தம் 500 மாணவிகள் நாட்டு நலப்பணித் திட்டத்தில் பங்கேற்கின்றனர். நாட்டு நலப்பணித் திட்டத்தில் உதவிப் பேராசிரியர்கள் முனைவர் திருமதி.இரா.பூமாதேவி, முனைவர் திருமதி.ஜோ.ஜெயக்குமாரி ஞானதீபம், முனைவர் திருமதி.து.ரேணுகா, முனைவர் திருமதி.ச.உஷாபுவனேஸ்வரி மற்றும் திருமதி.கோ.சுதா ஆகியோர் திட்ட அலுவலர்களாகப் பணியாற்றி வருகிறார்கள்.

21.06.2023 அன்று சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இயல்புநிலை யோகா அறக்கட்டளையுடன் இணைந்து உலக யோகா தினம் நடைபெற்றது. அந்நிகழ்வில் இயல்பு நிலை யோகா அறக்கட்டளையின் யோகக் கலை நிபுணர் திரு.செந்தில் குமார் மற்றும் அவருடைய குழுவினரும் இணைந்து மாணவிகளுக்கு பல்வேறு யோகாசனங்களைச் செய்து காண்பித்தனர்.

26.06.2023 அன்று போதைப் பொருள் ஒழிப்பு மன்றம் சார்பில் சர்வதேச போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு செல்லூர் காவல் நிலைய அதிகாரி திரு.ரஞ்சித்,மற்றும் அத்துறையின் அதிகாரிகள் இணைந்து விழிப்புணர்வு பேரணி நடத்தினர். இப்பேரணி கல்லூரியில் தொடங்கி தேவர் சிலை வரை நடத்தப்பட்டது. மேலும் பொதுமக்கள் மத்தியில் மாணவிகள் போதைப்பொருட்களினால் ஏற்படும் பிரச்சனைகள் பற்றி விழிப்புணரவு ஏற்படுத்தும் வகையில் சிறப்பு பேச்சு, துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்.

07.07.23 அன்று தமிழ்நாடு சமூக நலம்,மகளிர் உரிமைத்துறை, மதுரை மண்டலம் சார்பில் “பெண்கள் குடும்ப வன்கொடுமை மற்றும் வரதட்சணை” என்ற தலைப்பில் கருத்தரங்கம் கல்லூரி முதல்வர் முனைவர் சூ. வானதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருமதி.வாசுகி மற்றும் திருமதி.டயானா ஆகியோர், பெண்கள் சந்திக்கும் வரதட்சணை பிரச்சனைகள், பாலியல், வார்த்தைகள், பொருளாதார வன்கொடுமைகள் பற்றியும், இணைய மிரட்டல்கள் மற்றும் அதிலிருந்து மீட்பதற்கான பெண்களுக்கான உதவி எண்கள் பற்றியும் மூன்றாம் ஆண்டு மாணவியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை வழங்கினர்.

17.07.2023 அன்று பில்லியன் ஹார்ட்ஸ் அறக்கட்டளை - அப்பலோ மருத்துவமனை மற்றும் எங்கள் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட அலகுகளுடன் இணைந்து மாணவியர்களுக்கு 17.07.2023 அன்று உயிர் காக்கும் முதலுதவி பற்றிய சிறப்புப் பயிற்சித் திட்டத்தை ஏற்பாடு செய்தது. 32 மாணவர்களுக்கு அவசர காலங்களில் சிபிஆர் கொடுக்க பிரத்யேகமாகப் பயிற்சி அளிக்கப்பட்டது. அப்பலோ மருத்துவமனையின் அவசரச் சிகிச்சைப் பிரிவின், மூத்த ஆலோசகர், டாக்டர் ஜூட் வினோத், மாணவியர்களுக்கு தனித்தனியாகப் பயிற்சி அளித்தார்.

1.08.23 அன்று யூனிட் 52,53 மற்றும் 55 ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 30 நாட்டு நலப்பணித்திட்ட மாணவிகள் தாங்கள் தத்தெடுத்த மதுரை கள்ளந்திரி கிராமத்திற்குச் சென்று பிரதம மந்திரியின் ‘‘மேரி மதி மேரா தேஷ்’’ திட்டத்தின் கீழ், கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள மரங்களை நட்டனர். இத்திட்டத்தின்கீழ் 14.08.23 - பிரதமரின் “மேரி மதி மேரா தேஷ்” திட்டத்தின் கீழ் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதல் நாள் நிகழ்வில் கல்லூரி வளாகத்திற்குள் மரக்கன்றுகள் நடப்பட்டன. மாணவர்கள் தங்கள் கிராமத்திலிருந்து மண்ணை சேகரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர், மேலும் அமிர்த் கலாஷ் யாத்திரைக்காக அவர்களிடமிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. மரம் நடுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உறுதிமொழி எடுக்கப்பட்டது. மாணவர்கள் செல்ஃபி எடுத்து மேரி மாத்தி மேரா தேஷ் போர்ட்டலில் பதிவேற்றினர்.

15.08.23 அன்று தேசபக்தி உணர்வை வளர்க்கும் வகையில், நாட்டிற்காக மிக உயர்ந்த தியாகம் செய்த வீரர்களுக்கு, இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்து உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

17.08.23 அன்று மருத்துவ காப்பீடு அடையாள அட்டை பதிவுச் செய்வதற்கான முகாம் முதல்வர் முனைவர் திருமதி சூ.வானதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட முகாம் ஒருங்கிணைப்பாளர்கள் ராஜசேகரன், மதன், பிரேமா ஆகியோர் மாணவிகளுக்கு பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜ்னா செயலியை பதிவிறக்கம் செய்து அடையாள அட்டை பதிவு செய்யும் வழிமுறைகளை விளக்கினர்.18.08.23 அன்று அல்பெண்டசோல் மாத்திரைகள் மாணவியருக்கு வழங்கப்பட்டது

15.09.23 அன்று பெரியாரின் பிறந்த நாளான செப்டம்பர் 17-ம் தேதி சமூக நீதி தினமாகக் கடைப்பிடிக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளதிற்கு இணங்க அனைத்து நாட்டு நலப்பணித்திட்ட மாணவிகளும் உற்சாகமாக உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்

15.09.23 அன்று தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் மதுரை மாவட்டம் இணைந்து தீயணைப்பு மீட்புப் நடவடிக்கைகள் பற்றிய ஒத்திகை விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. மதுரை மெயின், தல்லாகுளம் மற்றும் அனுப்பானடி நிலைய தீயணைப்புதுறையின் மாவட்ட அதிகாரிகள் திரு.வினோத், திரு.பாண்டி ஆகியோர் பொறுப்பில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. எதிர்பாராமல் ஏற்படும் தீயை கட்டுப்படுத்துதல் , பாதிக்கப்பட்டவர்களை அதிலிருந்து மீட்டெடுத்தல் உள்ளிட்ட செயல்முறை விளக்கங்களைத் தீயணைப்புத்துறை நிலைய அதிகாரிகள் மாணவிகளுக்குச் செய்து காண்பித்தார்கள்.

25.09.23 அன்று மதுரை மாநகராட்சி - சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறையுடன் இணைந்து, இளம்பருவ கர்ப்பம் மற்றும் குழந்தைத் திருமணத்திற்கு எதிரான சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், குடும்ப நல துணை இயக்குநர் டாக்டர். என்.மணிவண்ணன், உடல்நலப் பிரச்சினைகள், இளம்பருவ கர்ப்பம் மற்றும் குழந்தை பிறப்புத் தொடர்பான சிக்கல்கள் குறித்து எடுத்துரைத்தார்.

26.09.23 அன்று நாட்டு நலப்பணித்திட்ட தினத்தை முன்னிட்டு மதுரை காமராஜர் பல்கலைக கழகத்தின் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பாண்டி, அவர்கள் சிறப்பு விருந்தினராக வந்திருந்து நாட்டு நலப்பணித்திட்ட தொண்டரின் பல்வேறு கடமைகள், திட்ட அலுவலர்களுடன் அவர்களின் ஒத்துழைப்பு, தன்னார்வத் தொண்டராக சமூகத்திற்கு அவர்களின் பங்களிப்பு பற்றிச் சிறப்புரையாற்றினார்.

27.09.23 அன்று மனையியல் துறையுடன் இணைந்து, ஊட்டச்சத்து வாரத்தினை முன்னிட்டு பாரதியார் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஊட்டச்சத்து தொடர்பான விளக்கங்களையும், செயல்முறைகளையும் கல்லூரி மாணவியர்கள் அளித்தனர். மேலும் நமது பாரம்பரிய உணவுமுறைகளைப் பற்றியும், பேருட்ட, நுண்ணூட்டச் சத்துக்களைப் பற்றியும் மாணவிகள் எடுத்துரைத்தனர்.

1.10.23 அன்று பிரதம மந்திரியின் துப்புரவுத் திட்டம் SWACHTA HISEVA - 2023, நம் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்ட மாணவிகளால் கடைபிடிக்கப்பட்டது. நாட்டு நலப்பணி திட்ட தன்னார்வலர்கள் (52,53& 55) ஒத்தக்கடை பஞ்சாயத்து மற்றும் ரோட்டரிகிளப் இணைந்து ஒத்தக்கடை பேருந்து நிலையத்தைச் சுற்றி சுத்தம் செய்தனர்.

16.10.23 அன்று கதர் மற்றும் கிராமத் தொழில்கள், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை மேம்படுத்துவதன் ஒரு பகுதியாக, கல்லூரி வளாகத்திற்குள் நாட்டு நலப்பணித் திட்ட அலகுகள் 52,53 மற்றும் 55 காதி மஹோத்சவம் - ஒரு நாள் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் உள்ள தமிழ்நாடு காந்தி ஸ்மாரக் நிதி, இயற்கை ஷாம்புகள், புடவைகள், கைவினைப் பொருட்கள், கேச எண்ணெய், சோப்புகள், ஊறுகாய் மற்றும் அவர்கள் தயாரிக்கும் உணவுப் பொருட்கள் போன்ற பல்வேறு பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்தது.

7.12.23 அன்று எந்தவொரு ஜனநாயக சமூகத்திலும் வாக்குரிமை என்பது அடிப்படை உரிமையாகும். வாக்களிக்கும் உரிமையை வலியுறுத்தும் வகையில் எங்கள் கல்லூரி என்.எஸ்.எஸ் பிரிவுகள் "வாக்களிக்கும் குடிமகனின் பொறுப்பு" என்ற முழக்கப் போட்டியை ஏற்பாடு செய்தன. இப்போட்டியில் சுமார் 25 மாணவர்கள் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றனர். 21.12.23 அன்று சானிடரி நாப்கின்கள் மற்றும் வைட்டமின் மாத்திரைகள் மாணவியருக்கு விநியோகம் செய்யப்பட்டது.

23.01.24 அன்று தமிழக அரசின் "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ், எங்கள் கல்லூரியின் என்.எஸ்.எஸ் பிரிவுகளால், "உயர்வுக்குப் படி" ஒரு நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 6 வெவ்வேறு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளைச் சேர்ந்த 12 ஆம் வகுப்பு மாணவிகள் எங்கள் கல்லூரிக்கு வருகை தந்தனர். உயர்கல்வியின் முக்கியத்துவம், வழங்கப்படும் படிப்புகள், உள்கட்டமைப்பு, மானியத் திட்டங்கள் மற்றும் எங்கள் கல்லூரி மூலம் கிடைக்கும் ஆதரவு நெட்வொர்க்குகள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டன. மதுரை, பள்ளிக் கல்வித்துறை, தலைமை நிர்வாக அதிகாரி, திருமதி.எஸ்.கார்த்திகா, பள்ளி மாணவர்களிடையே உரையாற்றினார்.

ஒரு வாக்காளர், ஒரு வாக்காளரின் உரிமைகளைப் பாதுகாக்கும் அரசியலமைப்பால் வகுக்கப்பட்ட சில உரிமைகள் மற்றும் சலுகைகளுக்கு இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு. 24.01.24 அன்று 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து மாணவர்களும் ஜனநாயகத்தின் சாரத்தைக் கொண்டாடவும், தேர்தல் செயல்பாட்டில் தீவிரமாக பங்கேற்பதை ஊக்குவிக்கவும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். வாக்களிக்கும் உரிமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வாசகங்களும் என்.எஸ்.எஸ் தொண்டர்களால் வாசிக்கப்பட்டன.

29.01.24 அன்று மதுரை, நெடுஞ்சாலைத்துறை, சாலைப் பாதுகாப்புப் பிரிவுடன், இணைந்து சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது. கோட்டப் பொறியாளர் ஆர்.வரலட்சுமி, உதவிக் கோட்டப் பொறியாளர் எம்.சாந்தினி ஆகியோர் சாலை விபத்துகளின் பல்வேறு வழிகள் மற்றும் அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர்.

05.02.24 அன்று மதுரை மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டுப்பிரிவு, ரோட்டரி சங்கம் இணைந்து என்.எஸ்.எஸ் பிரிவுகள் மற்றும் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு கிளப் ஆகியவை இணைந்து புகையிலை பயன்பாடு மற்றும் அது தொடர்பான போதைப்பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தின. திரு.இனியன், திருமதி.ராமலட்சுமி மற்றும் குழுவினரால் போதைப்பொருள் தொடர்பான பல்வேறு நோய்கள் மற்றும் பழக்கங்களிலிருந்து விடுபடுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து எடுத்துரைத்தனர். எய்ட்ஸ் மற்றும் தனிநபர் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு, மதுரை மாவட்ட இளம்பெண்கள் நல அமைப்பாளர் திருமதி ஆதிலட்சுமி அவர்கள் வழங்கினார்.

நம் கல்லூரியின் சார்பாக நடத்தப்பட்ட நாட்டு நலப்பணித்திட்ட தேசிய ஒருமைப்பாட்டு முகாமிலும், ஜெ.நாதஸ்ரீ - II BSc கணினி அறிவியல், நாகமாலினி - II BSc கணினி அறிவியல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் சார்பில் 11.12.2023-17.12.2023வரை திருமங்கலம் அன்னை பாத்திமா கல்லூரியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு முகாமிலும், **எம்.அனந்திகா** - II BSc கணினி அறிவியல் Shift –II 12.02.2024–18.02.24 வரை கர்நாடகாவின் மங்களூரு தேரலகட்டே, NITTE இல் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு முகாமிலும், 5.3.2024 முதல் 11.3.2024 வரை கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு முகாமிலும் கலந்து கொண்டு பரிசுகளை வென்று நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

**அகத்தரமதிப்பீட்டுக் குழு (IQAC)**

இக்கல்வியாண்டில் அகத்தர மதிப்பீட்டுக்குழுவின் அனைத்துச் செயல்பாடுகளும் முனைவா் சூ.வானதி முதல்வா் அவா்களின் வழிகாட்டுதலின்படி, இயக்குநராக மனையியல் துறைத்தலைவா் முனைவா் ஜ.பெ.ஷா்மிளா அவா்களும், ஒருங்கிணைப்பாளா்களாக கணினி அறிவியல் துறை இணைப்பேராசிரியா் முனைவா் பி.புனிதாபொன்மலா், வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியா் முனைவா் ப.செல்வி, வணிகவியல் துறை இணைப்பேராசிரியா் முனைவா் தா.குளோரி செல்வம் ஆகியோரும் செயலாற்றி வருகின்றனா்.

18.12.2023 அன்று நடைபெற்ற ஆராய்ச்சி மேம்பாடு குறித்த ஆசிரிய மேம்பாட்டுத் திட்ட நிகழ்வு நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கான வளமையராக – மதுரை, அருள் ஆனந்தர் கல்லூரி, வேதியியல் துறை, உதவிப் பேராசிரியர், டாக்டர். எம்.அமல்ராஜ் விரிவுரையாற்றினார்.

18.12.2023 அன்று ஆராய்ச்சி மேம்பாடு குறித்த ஆசிரிய மேம்பாட்டுத் திட்டம் நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கான வளமையராக மதுரை, அரசு அருங்காட்சியகத்தின் காப்பாளர்,முனைவா் எம்.மருதுபாண்டியன் அவர்கள் ஆய்வுரை வழங்கினாா்.

9.12.2023 அன்று ஒழுங்கமைக்கப்பட்ட ஆசிரிய மேம்பாட்டுத் திட்டம், கல்வியில் AI இன் திறனை வெளிப்படுத்துதல் மற்றும் நிகழ்ச்சிக்கான வளமையராக -Dr.மு.தங்கவேல், உதவிப் பேராசிரியர், தியாகராஜர் கல்லூரி, மதுரை விரிவுரையாற்றினர்

20.12.2023 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாற்றுத்திறனாளிகளுக்கான சர்வதேச தினம் 2023 திட்டத்தின் வளமையராக டி.எம்.டி. இந்திராணி பொன்வசந்த், மாண்புமிகு மதுரை மாநகராட்சி மேயர் மற்றும் டாக்டர். பி.விஜயலட்சுமி, முதல்வர், பார்வை மறுவாழ்வு மையம், அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை,கலந்து கொண்டனர்.

21.12.2023 அன்று ஒழுங்கமைக்கப்பட்ட ஆசிரிய மேம்பாட்டுத் திட்டம் CHATGPT மற்றும் கல்வியாளர்களுக்கான AI கருவிகள் திட்டத்தின் வளமையராக - Dr.N.முத்துமணி, முதல்வர், **PPG** கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை, விரிவுரையாற்றினார்.

22.12.2023 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர் மேம்பாட்டுத் திட்டம் பாரதிய பாவறா உத்சவ் - IQAC மற்றும் பொருளாதாரத் துறையின் பாரதியார் பிறந்தநாள் கொண்டாட்டம், நடத்தப்பட்டது.

10.02.2024 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட முன்னாள் மாணவர் தொடர்புத் திட்டம் “எனது படிப்பு வெளிநாட்டுப் பயணம்” என்ற தலைப்பில் சிந்து புகழேந்தி (SMGACW Alumna 2019-2022) சர்வதேச உறவுகள் பற்றி பேசினார்.

13.02.2024 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி கைவினைப் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. திரு.ஆர்.நடராஜன், கல்வி அலுவலர், காந்தி நினைவு அருங்காட்சியகம், மதுரை விரிவுரையாற்றினாா்.

08.03.2024 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர் மேம்பாட்டுத் திட்டம் மகளிர் தின சுவரொட்டி வடிவமைப்புப் போட்டி நடத்தப்பட்டது.

மேற்கண்ட நிகழ்வுகளில் பேராசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**தொழில் வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்புக் குழு**

மதுரை, ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரியின் தொழில் வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்புக் குழு, முதல்வர் முனைவர். திருமதி. சூ.வானதி அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் கீழ் செயல்படுகிறது. மனையியல் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர். இரா. சாரதா இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றுகிறார். மேலும் ஒவ்வொரு துறையிலிருந்தும் ஒரு பேராசிரியர் இக்குழுவின் உறுப்பினர்களாகச் செயலாற்றி வருகின்றனர்.

நமது கல்லூரியின் ஒவ்வொரு துறையிலிருந்து ஒரு மாணவியர் என்ற வீதத்தில் மொத்தம் 15 மாணவியர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய குரூப் IV தேர்வுக்கான இலவச பயிற்சி அமர்வுகளை மதுரை ஐஏஎஸ் அகாடமி வழங்கி வருகிறது. இந்த சிறப்பு வகுப்புகள் செப்டம்பர் 18, 2023 அன்று தொடங்கி, நாளது தேதி வரை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடத்தப்பட்டு வருகிறது.

நாந்தி அறக்கட்டளையின் மஹிந்திரா பிரைட் வகுப்பறையின் மூலம், விலங்கியல், தாவரவியல் மற்றும் மனையியல் துறைகளைச் சேர்ந்த 50 இறுதியாண்டு இளமறிவியல் மாணவியர்களுக்கு செப்டம்பர் 25, 2023 முதல் செப்டம்பர் 27, 2023 வரை இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

பெங்களூரில் செயல்படும் க்யூ ஸ்பைடர்ஸ் என்ற நிறுவனம் நடத்திய தொலைபேசி நேர்காணலில் வெற்றி அடைந்த இளமறிவியல் கணினி பயன்பாட்டியியல் மாணவியர்கள் மூவர், மற்றும் முது அறிவியல் கணினிஅறிவியல் நான்கு மாணவியர்கள் என மொத்தம் ஏழு முன்னாள் மாணவியர்களுக்கு வேலை உறுதி கடிதங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் கிராமப்புற வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து, நமது கல்லூரியில் 14 அக்டோபர் 2023 அன்று மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் 150 நிறுவனங்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. இதில் நமது முன்னாள், இந்நாள் மாணவியர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டு வேலைவாய்ப்பை பெற்றனர்.

நான் முதல்வன் திட்டத்தின் வேலைவாய்ப்பு முன் முயற்சியின் ஒரு பகுதியாக, "LinkedIn Career Kickstarter Program" இளநிலை பயிலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவியர்களுக்காக நவம்பர் 1, 2023 மற்றும் நவம்பர் 2, 2023 ஆகிய தேதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பயிற்சில் 946 இரண்டாமாண்டு இளநிலை மாணவியர் மற்றும் 900 மூன்றாமாண்டு இளநிலை மாணவியர் என மொத்தம் 1846 இளநிலை மாணவியர்கள் பங்கேற்று பயனுற்றனர்.

மதுரையில் செயலாற்றிவரும் BS டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட் என்ற தனியார் நிறுவனம் நமது கல்லூரியில் ஜனவரி 31, 2024 அன்று நடத்திய வளாக நேர்காணலில் 190 இறுதியாண்டு இளநிலை மற்றும் முதுநிலை மாணவியர் பங்கேற்றனர். இதில் வெற்றியடைந்த 10 மாணவியர்களுக்கு பணி உறுதிக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

மதுரையில் செயலாற்றிவரும் ஆரோலாப் என்ற தனியார் நிறுவனம் நமது கல்லூரியில் பிப்ரவரி 9, 2024 அன்று நடத்திய வளாக நேர்காணலில் 115 இறுதியாண்டு இளநிலை மாணவியர்கள் பங்கேற்றனர். இதில் வெற்றியடைந்த 73 மாணவியர்களுக்கு பணி உறுதிக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய குரூப் IV தேர்வுகளுக்குத் தயாராகிவரும் நமது கல்லூரி மாணவியர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பிப்ரவரி 28, 2024 அன்று “வெற்றிக்கான பயணம்: TNPSC குரூப் IV வெற்றியாளர்களின் நுண்ணோக்கு” என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் நமது கல்லூரி அலுவலகத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய குரூப் IV தேர்வில் வெற்றி பெற்று பணியாற்றி வரும் இளநிலை உதவியாளர்களான செல்வி. அபிநய ஆர்த்தி, செல்வி. பேச்சியம்மாள், மற்றும் திரு. முஹம்மது அப்சர் ஆகியோர் தேர்வில் வெற்றி பெறுவதற்கான வழிமுறைகளையும் சூட்சமங்களையும் மாணவியர்கள் பயனுறும் வகையில் தெரிவித்து உரையாற்றினர். இக்கருத்தரங்கில் 138 மாணவியர்கள் பங்கேற்றுப் பயனுற்றனர்.

வரும் நாட்களில் நமது கல்லூரியில் பயிலும் மாணவியர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையில் கீழ்க்கண்டவாறு வளாக நேர்காணல் நடைபெறவுள்ளது.

இறுதியாண்டு பயிலும் மாற்றுத்திறனாளி மாணவியர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கு ஏற்ற கற்றல் பாதைகளை வழங்குவதற்காக அவர்களது திறன்களை மதீப்பீடு செய்யும் அமர்வு Resource Education and Charitable Trust என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து மார்ச் 23ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இக்கல்வியாண்டில் தொழில் வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்புக் குழுவின் முயற்சிகள் அனைத்தும் மாணவியர்களின் வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும், அவர்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்புகளை அடைவதற்கு உண்டான வசதிகள் செய்வதற்கும் உறுதுணையாக இருந்தன.

### குடியரசு தின அணிவகுப்பில் நம் மாணவிகள்

புதுதில்லியில் 29.12.2023 முதல் 28.01.2024 வரை நடைபெற்ற தேசிய மாணவர் படை குடியரசுதின அணிவகுப்பு முகாமில் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார் இயக்குநரகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மூத்த துணை அதிகாரி **ஜி. மேனகா** மற்றும் கேடட் துணை அதிகாரி **எஸ். லத்திகா** ஆகியோர் பங்கேற்றனர். மூத்தத் துணை அதிகாரி **ஜி.மேனகா** 26.01.2024 அன்று கர்தவ்யா பாதை என்.சி.சி அணிவகுப்பின் அணிவகுப்புக் குழுவில் பங்கேற்றார். 28.01.2024 அன்று கரியப்பா அணிவகுப்பு மைதானத்தில் நடைபெற்ற பிரதமர் பேரணியில் கேடட் அண்டர் ஆபிசர் **எஸ்.லத்திகா** பங்கேற்றார். **சார்ஜென்ட். சத்யப்பிரியா** 26.01.2024 அன்று சென்னையில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்றார்.

### மாணவியர் சாதனைகள்

**B. சீதாலெட்சுமி** மற்றும் **K. ஹேமலதா** II M.sc வேதியியல் அவர்கள் ஹோலிகிராஸ் கல்லூரியில் 20.02.2024 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆய்வறிக்கை சமர்பித்து சிறந்த **“பதாகை வடிவமைத்தல்”** விருதினை வென்று பெருமை சேர்த்துள்ளனர். **B. சீதாலெட்சுமி,** II M.sc வேதியியல் SVN கல்லூரி, மதுரையில் 24.01.2024 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு **“சிறந்த ஆய்வுக்கட்டுரை விருதினை”**

வென்றார். **S.குளோரி** மற்றும் **S.கஸ்தூரி,** II M.SC மாணவிகள் மதுரை தியாகராசர் கல்லூரியின் வேதியியல் துறையில் 21.02.2024 அன்று நடத்தப்பட்ட வேதியியல் திறனாய்வு போட்டியில் கலந்து கொண்டு மூன்றாம் பரிசினை பெற்றனர். **S.கஸ்தூரி,** மற்றும் **M.சோபனா** II M.SC மாணவிகள் ஏழாம் அறிவு என்ற வேதியியல் திறனாய்வு போட்டியில் 21.02.2024 கலந்து கொண்டு இரண்டாம் பரிசினைப் பெற்றனர்.

பாத்திமா கல்லூரி (த), மதுரை, தமிழ் உயராய்வு மையம் 25.08.23 அன்று முத்தமிழ் விழா நடைபெற்றது. கல்லூரிகளுக்கிடையிலான கலை இலக்கியப் போட்டிகளில் நமது கல்லூரி மாணவிகள் பங்கேற்றனர்.

பேச்சுப் போட்டியில் - முதல் பரிசு தெ.ஐஸ்வர்யா III B.A., Tamil

நடனப் போட்டியில் - முதல் பரிசு வை.பிரியதர்ஷினி, தா. ஸ்ரீசௌந்தர்யா, அகல்யா (III B.A., Tamil), தர்ஷினி, ஆறுமுக நாச்சியார்,ஆ.நந்தினி (II B.A., Tamil)

பாட்டுப் போட்டியில் - முதல் பரிசு A.லோகேஸ்வரி II B.A.,English, ஆ.பாண்டிசெல்வி – III BA Tamil,M. ஆர்த்தி II MATamil , ஜனரஞ்சனி II B.Sc., Geography.

அதிக புள்ளிகள் பெற்ற நம் கல்லூரி முதலிடத்தைப் பெற்று பரிசுக் கோப்பையை வென்றது.

29.02.2024 அன்று மங்கையர்க்கரசி கல்லூரியில் மாநில அளவில் நடைபெற்ற NAKSHATRA'24 என்ற கலை விழாப் போட்டியில் மூன்றாமாண்டுத் தமிழ்த்துறை மாணவியர் வை.பிரியதர்ஷினி, தா.ஸ்ரீ.சௌந்தர்யா, கா.மாணிக்கப்பிரியா, க.ஜெகதீஸ்வரி, ம.நந்தினி, க.ஆறுமுகநாச்சியார் ஆகியோர் கிராமிய நடனப் போட்டியில் இரண்டாம் பரிசும், மூன்றாமாண்டு ஆங்கிலத்துறை மாணவியர் D.மதுமிதா, S.ரேஸ்மா நிஷா, M.ஹரிணிஸ்ரீ, பி.பிருந்தா, I.ஆஷியானா ஜாஸ்மின், M.தீபதுர்க்கா ஆகியோர் இணைவு நடனப் (FUSION DANCE) போட்டியில் இரண்டாம் பரிசும், மூன்றாமாண்டுத் தமிழ்த்துறை மாணவி மு.பாண்டிச்செல்வி (FASHION PARADE) பேஷன் அணிவகுப்பு போட்டியில் மூன்றாம் பரிசும், மூன்றாமாண்டு ஆங்கிலத்துறை மாணவி V.ஹிந்துஜா பென்சில், 3டி ஸ்கெட்ச் (PENCIL 3D SKETCH) போட்டியில் இரண்டாம் பரிசும், மூன்றாமாண்டு மனையியல் துறை மாணவியர் D.அனுசுயா, S.சித்ராராகினி ஆகியோர் அடுப்பில்லா சமையல் (FIRELESS COOKING) போட்டியில் மூன்றாம் பரிசும், இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவியர் M.கலையரசி, D.கிருஷ்ணபிரியா ஆகியோர் கம்பிக் கோலப் போட்டியில் இரண்டாம் பரிசும், மூன்றாமாண்டுத் தமிழ்த்துறை மாணவியர் கா.காளீஸ்வரி, ரா.கலைவாணி, பா.மாலதி மற்றும் இரண்டாமாண்டு தமிழ்த்துறை மாணவியர் கா.மஹதி, ஜெ.மோகனாதேவி, D.அருணா ஆகியோர் ரீல்ஸ் மேக்கிங் (REELS MAKING) போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்று நம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர். இப்போட்டியில் **நம் கல்லூரி முதலிடத்தைப் பெற்றதால் ரூ.10,000/-** பரிசுத் தொகையையும், கோப்பையையும் வென்றது.

மதுரை அமெரிக்கன் கல்லூரி நடத்திய AXIOMOTICA -24-ல் எமது கல்லூரி மாணவிகள் பங்குபெற்றதோடு, ஒட்டுமொத்த சாம்பியன் கோப்பையை வென்றனர்.

07.09.2023 அன்று மதுரை Alpha Hospital நடத்திய தேசிய ஊட்டச்சத்து வார விழா போட்டிகளில் மனையியல் துறை மாணவிகள் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றனர் மற்றும் ஒட்டுமொத்த பங்கேற்பு விருதும் பெற்றனர்.

## கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

நம் கல்லூரியில் முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை கலைஞர் நூற்றாண்டு விழா சார்பாக கருத்தரங்கப் போட்டி 09.01.2025 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பல்வேறு துறைகளைச் சார்ந்த மாணவியர் கலந்து கொண்டனர்.

தமிழ்த்துறை நடத்திய கலைஞர் நூற்றாண்டு விழாப் போட்டிகளில் குறும்படப்போட்டி 23.01.2024 அன்று நடைபெற்றது.

## பிற கல்லூரிகளில் நடைபெற்ற போட்டிகளில் மாணவியர் பெற்ற பரிசுகள்

31.08.2023 அன்று மதுரை மாவட்ட அளவிலான கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டியில் மூன்றாமாண்டு தமிழ்த்துறை மாணவி தெ.ஐஸ்வர்யா முதல் பரிசு பெற்றார்.

13.09.2023 அன்று டோக் பெருமாட்டி கல்லூரியில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா கட்டுரைப் போட்டியில் இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு மாணவி கு.வா.ரேவதி மூன்றாம் பரிசினைப் பெற்றார். இரண்டாமாண்டு புவியியல் மாணவி மு.ஐஸ்வர்யா பங்கேற்புச் சான்றிதழ் பெற்றார்.

14.09.2023 அன்று மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மதுரை மாவட்ட அளவிலான வழக்காடு மன்றப் போட்டியில் மூன்றாமாண்டுத் தமிழ்த்துறை மாணவி தெ.ஐஸ்வர்யா முதல் பரிசு பெற்றார்.

28.12.2023 அன்று வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாப் போட்டியில் மூன்றாமாண்டு தமிழ்த்துறை மாணவி தெ.ஐஸ்வர்யா பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றார்.

28.12.2023 அன்று யாதவர் கல்லூரியில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டியில் மூன்றாமாண்டு தமிழ்த்துறை மாணவி தெ.ஐஸ்வர்யா முதல்பரிசு பெற்றார்.

**போட்டிகள்**

24.06.2023 அன்று கர்மவீரர் காமராசரின் 121வது பிறந்தநாள் விழா மற்றும் NMS கல்வித் திருவிழா தமிழகம் மற்றும் புதுவை மாநில அளவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் மூன்றாமாண்டு தமிழ்த்துறை மாணவி தெ.ஐஸ்வர்யா முதல்பரிசு பெற்றார். பரிசுத் தொகையாக ரூ.10,000 பெற்றார்.

ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக்கோவிலின் தெய்வ நெறிக்கழகம் நடத்திய “திரிவேணிவிழா” 2023க்கான போட்டிகள் 02.08.2023 அன்று நடைபெற்றது. இதில் இரண்டாமாண்டு முதுகலை வணிக நிர்வாகவியல் துறையைச் சார்ந்த B.ராஜஸ்ரீ பேச்சுப்போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றார்.

பி.எ. ஜனரஞ்சனி (III B.Sc புவியியல் ஆங்கில வழி) 20.07.2023 அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற ஹிந்தி பாட்டுப் போட்டியிலும், 25.08.2023 பாத்திமா கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான குழு பாட்டுப் போட்டியில் பங்கேற்று முதல் பரிசினையும் பெற்றுள்ளார்.

ஸ்ரீமீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் இணைந்து மகாகவி பாரதியார் நினைவு கருத்தரங்கத்தினை முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை "இன்று புதிதாய் பிறந்தோம்" எனும் தலைப்பில் 08.09.2023 அன்று பேச்சுப் போட்டியினை நடத்தியது. இப்போட்டியில் பல்வேறு துறைகளிலிருந்து மாணவியர் கலந்து கொண்டனர். இதில் பா.ராஜஸ்ரீ, முதுநிலை இரண்டாமாண்டு வணிக நிர்வாகவியல் துறை மாணவி முதல் பரிசும், மூன்றாமாண்டு வேதியியல் துறை மாணவி லாவண்யா இரண்டாம் பரிசும், கா.மஹதி இரண்டாமாண்டு தமிழ்த்துறை மாணவி கா.மஹதி மூன்றாம் பரிசும் பெற்றனர்.

12.09.2023 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை மாவட்ட அளவில் தமிழ் வளர்ச்சித்துறையால் நடத்தப் பெற்ற கல்லூரி மாணவர்களுக்கானப் பேச்சுப் போட்டியில் நம் கல்லூரியின் சார்பில் கலந்து கொண்ட வணிகநிர்வாகவியல் இரண்டாமாண்டு மாணவி பா.ராஜஸ்ரீ இரண்டாம் பரிசாக ரூபாய்.3,000/- பெற்றார்.

29.09.2023 அன்று காந்தி அருங்காட்சியகத்தில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற கல்லூரி மாணவர்களுக்கிடையேயான கட்டுரைப் போட்டியில் இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு மாணவி கு.வா.ரேவதி ரூ.750/- காசோலையும், சான்றிதழும் பரிசாகப் பெற்றார். இரண்டாமாண்டு புவியியல் துறை மாணவி மு.ஐஸ்வர்யா பங்கேற்புச் சான்றிதழ் பெற்றார்.

13.10.2023 அன்று தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பட்ட தந்தை பெரியார் பிறந்தநாள், கல்லூரி மாணவர்களுக்கானப் பேச்சுப் போட்டியில் வணிக நிர்வாகவியல் துறை இரண்டாமாண்டு மாணவி பா.ராஜஸ்ரீ முதல் பரிசாக ரூபாய்.5,000/- பெற்றுள்ளார்.

14.10.2023 அன்று திமுக மாணவர் அணி நடத்திய மாணவ நேசன் - முத்தமிழறிஞர் கலைஞர் 100 – பேச்சும் எழுத்தும் - மாவட்ட அளவிலான கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு மாணவி கு.வா.ரேவதி ரூ.10,000/- காசோலையும் சான்றிதழும் பெற்றார். கணிதத்துறையைச் சேர்ந்த மோ.சில்வியா ரூ.1000/- காசோலையும் சான்றிதழும் பெற்றார்.

புவியியல் துறை சார்ந்த எஸ். சர்மிளா தேவி மற்றும் பி. நந்தினி (II B.Sc புவியியல் ஆங்கில வழி) 06.12.2023ல் மதுரை சமூக அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற சிறுதானிய உணவுகள் தயாரிப்பு போட்டியில் பங்குப்பெற்று சிறந்த சிறுதானிய உணவுத் தயாரிப்பிற்கான பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

22.12.2023 அன்று மதுரை கம்பன் கழகம் நடத்திய ஆண்டுவிழா பேச்சுப் போட்டியில் தமிழ்த்துறை மூன்றாமாண்டு மாணவி தெ.ஐஸ்வர்யா முதல் பரிசு பெற்றார். 3000/- ரூபாய் பரிசுத் தொகையும், சான்றிதழும், கேடயமும் பெற்றுள்ளார்.

10.01.2024 அன்று மதுரைக் கல்லூரியில் நடைபெற்ற "வைகறை 24" கலை விழாவில் தமிழ்த்துறை மூன்றாமாண்டு மாணவியர் க.பவானி, த.லலிதாஸ்ரீ ஆகியோர் சைகை மொழியைக் கண்டறிதல் போட்டியில் முதல் பரிசும், தெ.ஐஸ்வர்யா பேச்சுப் போட்டியில் மூன்றாம் பரிசும், தெ.ஐஸ்வர்யா, கு.வா.ரேவதி ஆகியோர் வினாடி வினா போட்டியில் முதல் பரிசும், சை.முத்துஅர்ச்சனா, மு.பாண்டிச்செல்வி, கு.சந்தியா, செ.துளசிமணி ஆகியோர் நிலைக்காட்சிப் படுத்துதல் போட்டியில் முதல் பரிசும், சி.சாருபார்கவி சிறுகதைப்போட்டியில் முதல் பரிசும், தெ.ஐஸ்வர்யா கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசும், வை.பிரியதர்ஷினி, க.ஜெகதீஸ்வரி, கா.மாணிக்கப்பிரியா, மு.ஸ்ரீமதி ஆகியோர் நடனப் போட்டியில் பரிசும் பெற்றனர்.

20.01.2024 அன்று அமெரிக்கன் கல்லூரி தமிழ் உயராய்வு மையம் நடத்திய குறிஞ்சி கலை இலக்கிய விழாவில் தமிழ்த்துறை மூன்றாமாண்டு மாணவிகள் ஸ்ரீசௌந்தர்யா, வை.பிரியதர்ஷினி, கா.மாணிக்கப்பிரியா, க.ஜெகதீஸ்வரி மற்றும் தமிழ்த்துறை இரண்டாமாண்டு மாணவியர் ம.நந்தினி, க.ஆறுமுகநாச்சியார் ஆகியோர் நடனப் போட்டியில் முதல்பரிசும், தமிழ்த்துறை மூன்றாமாண்டு மாணவி தெ.ஐஸ்வர்யா "ஒட்டி வெட்டி பேசுதல்" போட்டியில் இரண்டாம் பரிசும், தமிழ்த்துறை மூன்றாமாண்டு மாணவிகள் தெ.ஐஸ்வர்யா, கு.வா.ரேவதி வினாடிவினா போட்டியில் மூன்றாம் பரிசும் பெற்றனர்.

22.01.2024ல் தேர்தல் ஆணையம் நடத்திய ஓவியப் போட்டியில் இரண்டாம் பரிசாக ரூபாய் 1000/- பெற்றுள்ளார்.

27.01.2024 அன்று மணியம்மை கல்வி நிறுவனம் சார்பில் நடைபெற்ற "அறநெறி பரப்பும் குறள் நெறி விழா" திருக்குறள் பேரவையம் தொடக்க மாநாட்டில் முதுகலை இரண்டாமாண்டு தமிழ்த்துறை மாணவி அ.சிவலெட்சுமி கவிதைப்போட்டியில் இரண்டாம் பரிசினைப் பெற்றார். பரிசுத் தொகையாக ரூ.2000/- சான்றிதழும், நூல்களும் பெற்றார்.

17.02.2024 அன்று மன்னர் கல்லூரியில் நடைபெற்ற மாமதுரை கலைவிழாப் போட்டியில் மூன்றாமாண்டுத் தமிழ்த்துறை மாணவிகள் கா.மாணிக்கப்பிரியா, க.ஜெகதீஸ்வரி, சி.ஸ்ரீமதி, தா.ஸ்ரீ.சௌந்தர்யா ஆகியோர் நடனப் போட்டியில் இரண்டாம் பரிசும், மூன்றாமாண்டுத் தமிழ்த்துறை மாணவிகள் மு.பாண்டிச்செல்வி, வெ.அபிநயா, மு.நர்கிஸ்பானு, நித்யா ஆகியோர் பாரம்பரிய அணிவகுப்பு போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றனர்.

கணினிஅறிவியல் - டிசம்பர் 11–17, 2023 வரை, அன்னை பாத்திமா கல்லூரியில் M.K.U ஏற்பாடு செய்த தேசிய ஒருங்கிணைப்பு முகாமில் ஜே. நாதஸ்ரீ B.Sc., C.Sc பங்கேற்றார். ஜி.நாகமாலினி B.Sc., CSc பிப்ரவரி 12-18, 2024 வரை மங்களூரில் உள்ள **நிட்டே பல்கலைக்கழகத்தில்** நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்பு முகாமில் பங்கேற்று, கலாச்சாரப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பிடித்தார். மே 5, 2024 முதல் மார்ச் 11, 2024 வரை, கோயம்புத்தூரில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்பு முகாமில் எம்.அனாதிகா பங்கேற்றார். பிப்ரவரி 15-17, 2024 வரை, குற்றாலத்தில் நடைபெற்ற சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த மூன்று நாள் தேசியபாடத் திட்டத்தில் எம்.அனாதிகா II B.Sc., CSc., பங்கேற்றார்.

பொருளியல் துறை மாணவி I. ஜெஹரா மதுரை பாத்திமா கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையேயான போட்டிகளில் பென்சில் ஸ்கெட்ச் மற்றும் போஸ்டர் மேக்கிங் பிரிவில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்றார்.

**பயிற்சி வகுப்புகள்**

மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் 27.10.2023 அன்று நடைபெற்ற சுய தொழில் வேலைவாய்ப்பு நிகழ்வில் கைத்தொழில் பயிற்சியில் முதுகலைத் தமிழ் மாணவியர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

அருணாச்சலம் ஜேசுதாஸ் அறக்கட்டளை, இளங்கலை தமிழ் மூன்றாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவியர்களுக்கு ஆங்கிலம் மற்றும் கணினி பயிற்சி வகுப்புகளை நடத்தியது. பயிற்சி பெற்ற மாணவியர்களுக்கு 08.12.2023 அன்று முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறையில் அறக்கட்டளையின் சார்பாக பேராசிரியர் பத்மஸ்ரீ சாலமன் பாப்பையா அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஆங்கிலத் துறையில் அன்றாட பாடத்திற்கு அப்பாற்பட்டு பயிற்சிப் பட்டறைகள் மூலம் மாணவிகளுக்கு திறன்கள் பயிற்றுவிக்கப்படுகிறது. 10.01.2024 அன்று "Phonetics" என்ற தலைப்பிலும் 06.02.2024 அன்று "How to Write a Research Paper"என்ற தலைப்பிலும் முனைவர் வி.கிறிஸ்டோபர் ரமேஷ் அவர்கள் பயிற்சிப் பட்டறை நடத்தினார்.

06.03.2024 அன்று ஆங்கிலத் துறையில் முன்னாள் மாணவி மற்றும் சிவகங்கை ராஜா துரைசிங்கம் அரசு கல்லூரியில் கௌரவ விரிவுரையாளராக பணியாற்றும் செல்வி ஆ.நஸ்ரீன் அவர்கள் "Unveiling Opportunities and Introduction to NET/SET Examinations"என்ற தலைப்பில் பயிற்சிப்பட்டறை நடத்தினார். இந்த நிகழ்ச்சி தாங்கள் பயின்ற கல்லூரியின்வளர்ச்சியில் முன்னாள் மாணவரின் பங்களிப்பு என்ற நல்லெண்ண அடிப்படையில் நடத்தப்பட்டது.

டாக்டர்.கலைஞர்.மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களை முன்னிட்டு, தமிழ்நாடுஅரசு பட்டு வளர்ச்சித்துறையும் ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி விலங்கியல் துறையும் இணைந்து விலங்கியல்துறை மாணவியருக்கு 29.02.2024 அன்று பட்டுவளர்ப்பு குறித்து ஒரு நாள் தொழில்முறை பயிற்சியை வழங்கியது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்கள் தலைமை வகித்தார். விலங்கியல் துறைத்தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர்.வெ.கபிலா அவர்கள் அனைவரையும் வரவேற்று சிறப்புரை ஆற்றினார்கள். சமயநல்லூர், விஞ்ஞான், மத்தியபட்டு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், முனைவர்அ.மகிமாசாந்தி, அவர்கள் விரிவான விளக்கங்களோடு பட்டு வளர்ப்பு தொழில் நுட்பங்களை விளக்கினார். அலங்காநல்லூர், இளநிலை ஆய்வாளர் பட்டு வளர்ச்சிதுறை, திரு.ஹா.சிக்கந்தர் அவர்கள் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் குறித்து விளக்கிக் கூறினார். சமயநல்லூர் மத்தியபட்டு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், தொழில்நுட்ப உதவியாளர், திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

**துறைச்செயல்பாடுகள்**

**சான்றிதழ் படிப்பு:** நமது கல்லூரியின் கணினி பயன்பாட்டியல் துறை மற்றும் சென்னை இந்தியதொழில் நுட்பக் கழகம்,(IIT,CHENNAI) இணைந்து “Introduction to Data Science” எனும் சான்றிதழ் படிப்பை, முதநிலை மாணவியருக்கு வழங்கி வருகிறது.

**வாசகர் குழு**

2023-2024 கல்வியாண்டில் ஆங்கிலத்துறை திருமதி பொ.சுபா, உதவிப்பேராசிரியர் மற்றும் திருமதி.து.கீர்த்திகா கௌரவ விரிவுரையாளர் ஆகியோர் வாசகர் குழுவின் ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டு வருகின்றனர். 04.03.2024 அன்று நடந்த கூட்டத்தில் முதலாம் ஆண்டு முதல் சுழற்சியைச் சார்ந்த 10 மாணவிகள் மற்றும் முதலாம் ஆண்டு இரண்டாம் சுழற்சியைச் சார்ந்த 12 மாணவிகள் புத்தகத் திறனாய்வாளர்களாக செயல்பட்டு தங்களின் வாசிப்பு அனுபவத்தினை பகிர்ந்து கொண்டனர்.

**நாடகமன்றம்**

2023-2024 கல்வியாண்டில் உதவிப்பேராசிரியர்கள் முனைவர் ஈ. பிரேமா மற்றும் முனைவர் ஜா.ஷாகின் ஆகியோர் நாடக மன்ற ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். 24.07.2023 அன்று இரண்டாம் ஆண்டு இரண்டாம் சுழற்சிமாணவிகள் Charles Dickens எழுதிய “A Christmas Carol” என்ற படைப்பிலிருந்து சிலகாட்சிகளை நடித்துக் காட்டினர். 31.08.2023 அன்று இரண்டாம் ஆண்டு முதல் சுழற்சி மாணவிகள் Oscar Wilde எழுதிய “The Importance of Being Earnest” என்ற நாடகத்தின் சில காட்சிகளையும், Cedric Mount எழுதிய “The Never Never Nest” என்ற நாடகத்தின் சிலகாட்சிகளையும் அரங்கேற்றினர். இம்மன்றம் மாணவியரின் மொழித்திறன் மற்றும் செயல்பாட்டுத்திறன் ஆகியவற்றை மேலும் மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

**வாசகர் மன்றம்**

2023 - 2024 கல்வியாண்டில் ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர்கள் முனைவர் சு.ஜாகிராபானு மற்றும் முனைவர் ஞா.அருள் செல்வி மரியா ஆகியோர் வாசகர் மன்றத்தின்

ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். 08.09.2023 அன்று நடந்த வாசகர் மன்ற கூட்டத்தில் மூன்றாம் ஆண்டு முதல் சுழற்சியைச் சேர்ந்த நான்கு மாணவிகள் மற்றும் இரண்டாம் சுழற்சியைச் சேர்ந்த 4 மாணவியர் நூல்களை திறனாய்வு செய்தனர். 14.02.2024 அன்று நடந்த கூட்டத்தில் மூன்றாம் ஆண்டு முதல் சுழற்சியைச் சேர்ந்த நான்கு மாணவியர் மற்றும் இரண்டாம் சுழற்சியைச் சேர்ந்த நான்கு மாணவியர் நூல்களை திறனாய்வு செய்தனர். 01.03.2024 அன்று நடந்த கூட்டத்தில் மூன்றாம் ஆண்டு முதல் சுழற்சியைச் சேர்ந்த மூன்று மாணவியர் மற்றும் இரண்டாம் சுழற்சியைச் சேர்ந்த மூன்று மாணவியா் நூல்களை திறனாய்வு செய்தனா். வாசகா் மன்றம் மாணவிகளின் வாசிப்புதிறனை மேம்படுத்தும் வகையில் செயலாற்றுகிறது.

## தொடர் சொற்பொழிவு (LECTURE SERIES)

புதிய பரிமாணங்களையும் புதிய உத்திகளையும் மாணவிகளுக்கு எடுத்துரைக்க ஆங்கிலத் துறையில் Lecture Series எனப்படும் நிகழ்வு நடத்தப்படுகிறது.

ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியரான முனைவர். வி. கிறிஸ்டோபர் ரமேஷ் அவர்கள் 22.06.2023 அன்று "Introduction to Literary Criticism" என்ற தலைப்பில் உரையாற்றினார். ஆங்கிலத் துறைத்தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் முனைவர் தா.மோ.அமலா அவர்கள் "Cruising through the Realms of Criticism and Theory" என்ற தலைப்பில் 23.06.2023 அன்று உரைநிகழ்த்தினார். உதவிபேராசிரியர் முனைவர் வே.பொன்மாரி அவர்கள் "Guidance on MOOC Courses: Enrich Enhance Enrich" என்ற தலைப்பில் 12.07.2023 அன்று உரையாற்றினார். இரண்டாம் சுழற்சி கௌரவ விரிவுரையாளர் திருமதி. சா.ஷாலி அவர்கள் "Percepts of Psychological Approach to Literature" என்ற தலைப்பில் 24.07.2023 அன்று உரை நிகழ்த்தினார்.

## உலக சுற்றுலா தினம்

நமது கல்லூரி வரலாற்றுத் துறையில் 27.09.2023 அன்று **உலக சுற்றுலா தினம்** கொண்டாடப்பட்டது. அன்று சிறப்பு விருந்தினராக மதுரை மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு. S.M. ஸ்ரீ பாலமுருகன் அவர்கள் மதுரையில் உள்ள சுற்றுலா தலங்கள் பற்றி எடுத்துரைத்தார். சுற்றுலா வழிகாட்டி சங்கத்தின் தலைவர் திரு. A.சிவகுருநாதன் அவர்கள் சுற்றுலா வழிகாட்டியாக செல்வதற்கான தகுதிகள் பற்றியும், சுற்றுலாத் துறையில் உள்ள வேலை வாய்ப்புகள் பற்றியும் சிறப்புரை ஆற்றினார்கள்.

31.10.2023 அன்று சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. அன்று மாணவிகள் தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர்.

9.1.2024 தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு, மதுரை மருத்துவமனை மனநல பயிற்சியாளர் திருமதி.நர்கிஸ் ஃபருக் அவர்கள் "மனநலம் மற்றும் மன அழுத்த மேலாண்மை" என்ற தலைப்பில் மாணவிகளிடையே உரையாற்றினார்.

5.2.2024 அன்று ஐ.நா தினத்தை கொண்டாடும் விதமாக கல்லூரி, துறைகளுக்கு இடையே பேட்டிகள் நடத்தப்பட்டது. கட்டுரை போட்டி "ஐக்கிய நாடுகள் சபையும் நீடித்த உள்ளடக்கிய வளர்ச்சியும்", என்ற தலைப்பிலும் பேச்சுப் போட்டி "உலக அமைதியில் ஐ.நாவின் பங்கு" என்ற தலைப்பிலும் நடைபெற்றது.

6.2.2024 அன்று மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடும் விதமாக "மனித உரிமைகள் மற்றும் மீறல்கள்" என்ற தலைப்பில் மாணவியர் கட்டுரை எழுதினார்கள்.

04.10.2023 அன்று இரண்டாம் ஆண்டு மாணவிகளுக்கு "யோகா செய்முறை பயிற்சி" வழங்கப்பட்டது. அதில் மதுரை அறிவுத் திருக்கோயிலை சேர்த்த திருமதி. அங்கயற்கண்ணி மற்றும் திருமதி.சாந்தி அவர்கள் மாணவிகளுக்கு யோகா முக்கியத்துவத்தை கூறி பயிற்சி அளித்தனர்.

இயற்பியல் துறையில் கொடைக்கானல் சூரிய ஆய்வகத்தின் அருங்காட்சியகக் கண்காணிப்பாளர் முனைவர். V.அசோக்குமார் அவர்களால் "சூரியனைப் பற்றிய ஆய்வுகள்" என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது.

"விண்வெளி அறிவியல்'' என்ற தலைப்பில் பல்வேறு போட்டிகள் மாணவியர்களுக்கு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் வணிக நிர்வாகவியல் துறை உதவிப்பேராசிரியரும், உதவிதேர்வுக் கட்டுப்பாட்டாளருமான முனைவர் டே.ஜெபப்ரியா, "நட்சத்திரம்" குறித்த அழகுநயப்புக்காட்சி போட்டியில் ஆர்வத்துடன் பங்கேற்று மாணவியரை ஊக்கப்படுத்தினார்.

31.10.2023 அன்று மதுரை தேவதாஸ் மருத்துவமனை மற்றும் சொராப்டிமிஸ்ட் இன்டர்நேஷனல் இணைந்து இயற்பியல் துறையால் "இரத்தசோகை விழிப்புணர்வு முகாம்" நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் டாக்டர். லலிதா, டாக்டர் அருணா முத்தரசி, டாக்டர் ஹேமாசதீஸ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவியர்களுக்கு விழிப்புணர்வு சொற்பொழிவுகளை வழங்கினர்.

**உலக இயற்கைப் பாதுகாப்பு தினம்**

தாவரவியல் துறை மற்றும் தானம் அறக்கட்டளை இணைந்து உலக இயற்கை பாதுகாப்பு தினம் 10.08.2023 அன்று கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தாவரவியல் துறை இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர்.ஞா.கிரேஸ் லிதியாள் புஷ்பலதா, அவர்கள் அனைவரையும் வரவேற்று இயற்கை பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்து கூறினார். தானம் அறக்கட்டளையின் திட்ட மேலாளர் திரு.வி.வெங்கடேசன் அவர்கள் "இயற்கையைப் பாதுகாப்பதற்கான புதிய சமூக ஒழுங்கு" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். நிகழ்வின் முடிவில் முனைவர்.ச.மோ.ஜெனிட்டா நித்தியா அவர்கள் நன்றியுரை கூறினார். இந்நிகழ்வைத் தொடர்ந்து தாவரவியல் இளம் அறிவியல் மற்றும் முதுஅறிவியல் மாணவிகளுக்கு பேச்சுப்போட்டி, விவாதம், கவிதைப்போட்டி, சுவரொட்டி தயாரித்தல் மற்றும் ஓவியம் வரைதல் முதலிய போட்டிகள் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 117 மாணவியர்கள் கலந்துக் கொண்டு பரிசுகளையும், சான்றிதழ்களையும் பெற்றனர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. செயல்திட்ட மேலாளர் திரு.S. இளமுகில் நிறைவுரை வழங்கினார்.

**மன்ற செயல்பாடுகள்**

2023-24ஆம் கல்வியாண்டில் அனைத்துத் துறைகளிலும் இளநிலை மற்றும் முதுநிலை மாணவிகளுக்கு மன்றக் கூட்டம் நிகழ்த்தப்பெற்றது.

இக்கல்வியாண்டின் அனைத்துத் துறைகளிலும் மாணவிகளை ஊக்குவிக்கும் நோக்கில் கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, ரங்கோலிப் போட்டி, ஓவியப் போட்டி, திறனறிவுத் தேர்வு, வினாடி வினா மற்றும் சுவரொட்டி தயாரித்தல் போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## சிறப்புக் கருத்தரங்கம்

வேதியியல் துறையில் 03.07.2023 அன்று நடைபெற்ற "நானோ மருத்துவம்" என்ற தலைப்பில் கருத்தரங்கின் தென் கொரியா, இன்சியான் தேசிய பல்கலைக்கழகம், ஆராய்ச்சி கண்காணிப்பாளர் மற்றும் பேராசிரியர் Dr.சு.வசந்தன், அவர்கள் வேதியியல் சிறப்புக் கருத்தரங்கத்தில் உரையாற்றினார். 04.08.2023 அன்று சென்னை, CLRI, துணை இயக்குனர் (Rtd) Dr.N.சோமநாதன், கலந்துகொண்டு மின்னணுவியலில் கரிம மூலக்கூறுகளின் பங்கு என்னும் தலைப்பிலும், தலைமை ஆசிரியர் (ஓய்வு) Mr. மு.ராஜமயில் அவர்கள் 21.12.2023 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு, ஆன்மீக அறிவியலில் வேதியியலின் பங்கு என்னும் தலைப்பிலும் உரையாற்றினார்.

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறையும், மதுரை மாவட்ட தமிழ் வளர்ச்சித்துறையும் இணைந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஆட்சிமொழிக் கருத்தரங்கத்தினை 31.07.2023 அன்று நடத்தியது. இந்நிகழ்வில் மதுரை மாவட்ட ஆட்சியர் திருமதி. மா.சௌ.சங்கீதா,வருவாய் கோட்டாட்சியர் திருமதி ஷாலினி அவர்கள் விழாப் பேருரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி சிறப்புரையாற்றினார். முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறைத் தலைவர், இணைப் பேராசிரியர் முனைவர். சு.சந்திரா அவர்கள் ''கலைஞர் நிகழ்த்திய செம்மொழிச் செயற்பாடுகள்'' எனும் தலைப்பில் உரைநிகழ்த்தினார். கவிஞர் மு.முத்துமுருகன் அவர்கள் கலைஞரின் திரையிசைப் பாடல்களைப் பாடினார். கலைஞர் நினைவுகளில் மாணவியர் மகிழ்வுற்றனர்.

12.09.2023 அன்று முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறையும், மதுரை மாவட்ட தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் இணைந்து மகாகவி பாரதியார் நினைவுநாள் கருத்தரங்கத்தினை நடத்தியது. "இன்று புதிதாய்ப் பிறந்தோம்'' எனும் தலைப்பில் பேச்சுப்போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

21.12.2023 அன்று "Research Paper Presentation Skill" என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஆங்கிலத்துறையில் நடைபெற்றது. முனைவர் வி.கிறிஸ்டோபர் ரமேஷ் அவர்கள் திறனாளராக இருந்து சிறப்புரையாற்றினார்.

## ஆய்வரங்கம்

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் இரு புதன் கிழமைகளில் ஆய்வரங்கம் நடத்தப்படுகிறது. இந்நிகழ்வில் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், முனைவர் பட்ட ஆய்வு மாணவியர்கள், முதுகலை மாணவிகள் ஆகியோர் பங்கேற்று தங்களது ஆய்வுக் கட்டுரைகளை வழங்கி வருகின்றனர். இக்கல்வியாண்டில் ஆறு ஆய்வரங்கங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன் ஒருங்கிணைப்பாளர்களாக தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் இரா.பிரியதர்ஷினி, கௌரவ விரிவுரையாளர்கள் திருமதி. க.பிரேமா, முனைவர் ஜெ.சுந்தரபாண்டியன் ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர்.

## ஆராய்ச்சி மன்றம்

இந்தக் கல்வியாண்டில் (2023–2024) ஆங்கிலத்துறையில் ஆராய்ச்சி மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர்களாக இணைப்பேராசிரியர்கள் முனைவர் வி.பாலமுருகேஸ்வரி மற்றும் முனைவர். பெ.சுமதி ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர் முதுகலை இரண்டாம் ஆண்டைச் சேர்ந்த 27 மாணவிகள் 28.07.2023 அன்று நடந்த ஆராய்ச்சி மன்றக் கூட்டத்தில் ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தனர். 05.03.2024 அன்று நடந்த ஆராய்ச்சி மன்றக் கூட்டத்தில் முதுகலை முதலாம் ஆண்டைச் சேர்ந்த 12 மாணவிகள் ஆராய்ச்சி கட்டுரைகள் வாசித்தனர். ஆராய்ச்சி மன்றம் மாணவிகளிடம் ஆங்கில இலக்கிய ஆராய்ச்சி குறித்த தாக்கத்தை ஏற்படுத்தி ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுத உதவும் வகையில் செயல்படுகின்றது.

## பல்கலைக்கழக மானியக் குழு (UGC)

முதல்வர் அவர்களின் தலைமையில் நம் கல்லூரியின் பல்கலைக்கழகமானியக் குழுவின் ஒருங்கிணைப்பாளர்களாக 2021 - 2022 முதல் வரலாற்றுத் துறை இணைப்பேராசிரியர் முனைவர்.செ.செந்தாமரை, இயற்பியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர். க.செல்வராணி, மற்றும் ஆங்கிலத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர்.சு.ஜாகிராபானு ஆகியோர் செயல் பட்டுவருகின்றனர். 2027-2028 கல்வியாண்டுவரை கல்லூரியின் தன்னாட்சி அங்கீகாரம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

2023 - 2024 ஆம் கல்வியாண்டில், தமிழ்நாடு மாநில உயர்கல்விமன்றம் பரிந்துரை செய்த பாடத்திட்டங்களை அமல்படுத்துவதற்கு ஏதுவாக மாணவியரின் கல்வி வளர்ச்சிக்கு தேவையான பாடத்திட்டம் இக்கல்லூரியின் பாடத்திட்ட மேம்பாட்டுக்குழுவால் செயல்படுத்தப்பட்டுள்ளது. அனைத்துதுறைகளின் பாடத்திட்டக்குழு கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. மேலும் அனைத்து துறை மன்றங்கள், சங்கங்கள், ஆற்றுப்படுத்தல் குழு, வேலைவாய்ப்பு வழி காட்டிக் குழு, விளையாட்டு குழு, நூலகக் குழு, இணையக் குழு, அறிவியல் மன்றக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு அவைகளின் செயல்முறைகளுக்கு கல்விமன்றக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டுக் குழு, நிதிக்குழு மற்றும் ஆட்சிக்குழுக் கூட்டங்கள் நடத்தப் பட்டுள்ளன.

## ஊக்கப்படுத்தும் நிகழ்வுகள்

மாணவியரின் திறமையை அங்கீகரிக்கும் விதமாகவும் தமிழிலக்கியம் பயிலும் மாணவியருக்குத் தன்னம்பிக்கையையும் ஊக்கமும் அளிக்கும் வகையிலும் முதுகலை தமிழிலக்கியம் பயின்ற ர.சிவரஞ்சனி, MBA இரண்டாமாண்டு மாணவி, காவலா் தோ்வில் தோ்ச்சியடைந்துள்ள தமிழிலக்கியம் மூன்றாமாண்டு மாணவி வி.வாசுகி இருவரும் சிறப்பு விருந்தினா்களாகப் பங்கேற்று “தோ்வுக்குத் தயாராகுதல்” என்னும் தலைப்பில் உரை வழங்கினா். இந்நிகழ்வு தமிழ்த்துறை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் என்றால் மிகையாகாது.

## இளைஞர் செஞ்சிலுவை சங்கம் (YRC)

எமது கல்லூரியில் செஞ்சிலுவைச் சங்கம் இரண்டு அலகுகளாக செயல்பட்டு வருகின்றது. இதன் திட்ட அலுவலர்களாக திருமதி. கி.ஜானகி ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் மற்றும் திருமதி. ச.பாஷ்ய பிரபா உஷாநந்தினி வரலாற்றுத்துறை உதவிப்பேராசிரியர் செயலாற்றி வருகின்றனர். மகளிர் கல்வி விழிப்புணர்வு, விளையாட்டு மற்றும் கலைத்துறைகளில் நடைபெறும் போட்டிகள் தூய்மைப்பணி விழிப்புணர்வு போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்க மாணவிகளை வழி நடத்திச் செல்வதில் செஞ்சிலுவைச் சங்கம் சிறந்த பங்காற்றுகிறது. இந்த ஆண்டு இளைஞர்களுக்கான மூன்று நாள் புத்தொளி மற்றும் பயிற்சிப் பட்டறை (19.03.2024 முதல் 21.03.2024 வரை) மதுரைக் காமராசா் பல்கலைக்கழகத்தில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் சார்பாக நடத்தப்பட்டது. இதில் ஆங்கிலம் மற்றும் வரலாற்றுத் துறைகளிலிருந்து 19 மாணவிகள் பங்கு பெற்று பயனடைந்தனர். மற்றும் 22.03.2024 அன்று ஒருங்கிணைப்பாளர்களுக்கான ஒரு நாள் புத்தொளிப்பயிற்சி நடத்தப்படது. இதில் வரலாற்றுத் துறை உதவிப்பேராசிரியர் திருமதி. ச.பாஷ்ய பிரபா உஷா நந்தினி அவர்கள் பங்கு பெற்று பயனடைந்தார்.

## மகளிர் மேம்பாட்டுக் குழு

ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியின் மகளிர் மேம்பாட்டுக் குழுவானது தகுந்த விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்வுகள் மூலம் கிராமப்புற மாணவர்களும் உயர்தரக் கல்வியின் பயனை அடைய வேண்டும் என்ற நோக்குடன் செயல்பட்டு வருகிறது. 26.09.2023 அன்று முதலாம் ஆண்டு மாணவியருக்காக மதுரை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து "கை சுகாதாரம் மற்றும் உறுப்பு தான விழிப்புணர்வு" முகாமை ஏற்பாடு செய்திருந்தது. அந்நிகழ்வில் மருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள் உரையாற்றியும், மருத்துவக் கல்லூரி மாணவிகள் செயல்முறை நிகழ்வுகளை நடத்திக் காட்டியும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். செயல் மேம்பாட்டு பயிற்சியான "Digital 101" என்ற நிகழ்வினை Skillda மற்றும் NISCOM Foundation னுடன் இணைந்து மகளிர் மேம்பாட்டுக் குழு 28.12.2023 மற்றும் 29.12.2023 அன்று நடத்தினர். 1045 மாணவிகள் தங்கள் பெயர்களை ஆர்வமுடன் பதிவு செய்து பயிற்சி எடுத்துக் கொண்டனர். 08.03.2024 அன்று உலக மகளிர் தினவிழா மகளிர் மேம்பாட்டுக் குழுவினரால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். "நாகரீக வளர்ச்சி பெண்களை முன்னேற்றுகிறதா அல்லது முடக்குகிறதா'' என்ற தலைப்பில் பட்டிமன்றம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நடுவராக சு.ஹேமமாலினி, சிவகங்கை அரசு கலைக் கல்லூரி பேராசிரியர் கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள். பேராசிரியர்கள் முனைவர் கி. பியூலா ஆங்கிலத்துறை, முனைவர் மு.புவனேஸ்வரி பொருளியல் துறை, முனைவர் ஆ.தேன்மொழி வணிகவியல் துறை, முனைவர் ஆ.கலையரசி விலங்கியல் துறை மற்றும் மாணவிகள் B.ராஜாஸ்ரீ II MBA, K.நிவேதா II Bsc இயற்பியல் பட்டிமன்றத்தில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சிறப்புச் செய்தார்கள். இந்நிகழ்வுகளை முனைவர்.கி. விக்னேஸ்வரி, ஒருங்கிணைப்பாளர், மகளிர் மேம்பாட்டுக்குழு மற்றும் குழு உறுப்பினர்கள் பேராசிரியர்கள் முனைவர் பூ.சாந்தி வேதியல்துறை, முனைவர் ஈ.பிரேமா ஆங்கிலத்துறை, முனைவர் பு.ந.நிர்மலா இயற்பியல் துறை, திருமதி.பொ.யுவராணி விலங்கியல் துறை ஒருங்கிணைப்பில் சிறப்பாக நடைபெற்றன.

## தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் (EDC)

21.08.2023 அன்று உலக தொழில் முனைவோர் தினத்தினை முன்னிட்டு நமது கல்லூரியின் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையமும், வேதியியல் துறையும் இணைந்து, இறுதியாண்டு இளங்கலை, இளமறிவியல் மற்றும் முதுகலை, முது அறிவியல், கல்லூரி விடுதி மாணவியர்களுக்கு காந்திய நிர்மாணத் திட்டங்கள் / கிராம கைத்தொழில் என்ற தலைப்பில் பயற்சிப்பட்டறை நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் சோப்பு திரவம், சோப்புத்தூள், பாத்திரம் கழுவும் திரவம், பினாயில், ஷாம்பூ, தரையைச் சுத்தம் செய்யும் திரவம், ஊறுகாய் மற்றும் சிறுதானியத்திலிருந்து சிற்றுண்டிகள் தயாரிக்கப்படும் பயிற்சியும் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் 192 கல்லூரி விடுதி மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். 13.02.2024 செவ்வாய்க்கிழமை நமது கல்லூரியின் அகத்தர மதிப்பீட்டுக் குழுவுடன் சேர்ந்து பயிற்சி பட்டறை நிகழ்த்தப்பட்டது. இதில் 73 கல்லூரி மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்வில் மதுரை, காந்தி நினைவு அருங்காட்சியகம், கல்வி அலுவலர், திரு.இரா.நடராசன், அவர்கள் சிறப்புரையாற்றினார். திருவாட்டி மகாஇலக்குமி இராமதாசு அவர்கள் மாணவியர்களுக்கு பயற்சி அளித்தார். முனைவர் சு.சந்திரா அவர்கள் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு வருகிறார்.

**தேர்தல் கல்வியறிவு கழகம் (ELC)**

மதுரை மண்டல இணை இயக்குநர், அவர்களின் அறிவுறுத்தலின்படி நமது கல்லூரியின் தேர்தல் எழுத்தறிவு கழகம் 02.01.2024 அன்று பாட்டுப்போட்டியினை நடத்தியது. புவியியல் துறை மூன்றாமாண்டு மாணவி ஜனரஞ்சனி முதல் பரிசு ரூ.2000 பெற்றார். இவர் மாநில அளவிலான போட்டிக்கும் தேர்வு பெற்றார். 27.10.2023 அன்று நமது கல்லூரியின் தேர்தல் எழுத்தறிவு கழகத்தின் சார்பில் "தேசத்திற்கு வாக்களியுங்கள் - வாக்கு எனது உரிமை" என்ற தலைப்பில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியைத் தமிழ்த் துறை இணைப்பேராசிரியர் கா.சத்யா மற்றும் முனைவர் ப.நிர்மலா தேவி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். நமது கல்லூரிக் கல்வி இணை இயக்குனரின் அறிவுறுத்தலின்படி, நமது கல்லூரியின் தேர்தல் கல்வியறிவு கழகம் மற்றும் Youth Welfare Club சார்பாக, மக்களவை பொதுத் தேர்தல் 2024 முன்னிட்டு, 'முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு' என்ற பொருளின் அடிப்படையில், 19.3.24, அன்று மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டியும், பேச்சுப்போட்டியும் நடைபெற்றது.

தேர்தல் கல்வியறிவு கழக பொறுப்பாசிரியர் மற்றும் வணிக நிர்வாகவியல் உதவிப் பேராசிரியர் முனைவர் ச.கவிதா, Youth Welfare Club பொறுப்பாசிரியர்கள், கணினி பயன் பாட்டியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர். அ. விஜயா மற்றும் வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர்.வே.இந்திரா தேவி ஆகியோர் போட்டிகளை ஒருங்கிணைப்பு செய்திருந்தார்கள்.

**பெற்றோர் ஆசிரியர் கழகம்**

நமது கல்லூரியில் செயல்பட்டுவரும் பெற்றோர் ஆசிரியர் கழகம் நமது கல்லூரி முதல்வர், முனைவர் சூ. வானதி அவர்களை தலைவராகவும், புவியியல் உதவிப் பேராசிரியர் முனைவர் ஆ.காந்திமதி அவர்களை செயலாளராகவும், கணிதத் துறை உதவிப் பேராசிரியர் து.ஆறுமுகக்கனி அவர்களை பொருளாளராகவும் கொண்டு செயல்படுகிறது.

நமது கல்லூரி பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் கீழ் 22 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.அலுவலகத்தில் 2 நபர்களும், ஆசிரியர்களாக 6 பணியாளர்களும், ஆய்வக உதவியாளர்களாக 6 நபர்களும், தூய்மை படுத்தும் பணியில் 7 நபர்களும், IQAC பணியில் 1 நபரும் பணிபுரிந்து வருகிறார்கள்.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் நமது கல்லூரியில் துறை வாரியாக பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டம் நடத்தப்படுகிறது.

**மாணவர் சமுதாயத் திட்டம் (CSS)**

நமது கல்லூரியில் சமூகநலப் பணித்திட்டம் CSS ஆனது நம் கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்களைத் தலைவராகவும், விலங்கியல் துறைத் தலைவர் முனைவர் திருமதி வெ.கபிலா அவர்களை உபதலைவராகவும், தமிழ்துறைத் தலைவர் முனைவர் சு.சந்திரா அவர்களையும், விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் எ.எமிமாள் விக்டோரியா அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. நம் கல்லூரியில் பயிலும் அனைத்து துறைகளையும் சார்ந்த, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய. பார்வையற்ற மற்றும் மாற்றுத்திறனாளி மாணவியர்கள் 136 பேருக்கு சமூக நலத் தொண்டு நிதியிலிருந்து தலா ரூ.360/- வழங்கப்பட்டுள்ளது.

## நுகர்வோர் மன்றம்

2023-24ஆம் கல்வியாண்டில் பொருளியல் துறை மற்றும் வணிகவியல் துறை ஒருங்கிணைப்போடு நுகர்வோர் மன்ற செயல்பாடுகள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் மன்ற செயலாளராகக் கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்களும் மற்றும் நுகர்வோர் மன்ற ஒருங்கிணைப்பாளராகப் பொருளியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் மு.அருணா அவர்களும் செயலாற்றி வருகிறார்கள்.

2023-24ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அறிவித்தது. இதனைத் தொடர்ந்து மதுரை சமூக அறிவியல் கல்லூரியில் 08.12.2023 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையிலும், நுகர்வோர் மன்ற சார்பிலும், இளம்நுகர்வோருக்குச் சிறுதானியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், **சிறுதானிய உணவு திருவிழா** நடத்தப்பட்டது. இவ்விழாவில் நமது கல்லூரியைச் சார்ந்த மாணவியர்கள் கலந்து கொண்டு மிகச் சிறப்பான முறையில் சிறுதானிய உணவு பொருள்களைத் தயாரித்துக் காட்சி செய்தமைக்காகச் சான்றிதழ் வழங்கப்பட்டது. நுகர்வோர் மன்றச் சார்பாக கலந்து கொண்ட மாணவிகளுக்கு பரிசு பொருட்களும், சான்றிதழும் நமது கல்லூரி முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

20.01.2024 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உலக நுகர்வோர் தினத்தை முன்னிட்டு, கவிதை, கட்டுரை மற்றும் ஓவியப்போட்டிகள் நடத்தப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ம.செள.சங்கீதா அவர்கள் 14.02.2024 அன்று தேசிய நுகர்வோர் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினவிழாவில் தலைமையேற்று போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

எட்டுக் கல்லூரிகள் கலந்து கொண்ட கட்டுரைப் போட்டியில் நமது கல்லூரியைச் சார்ந்த பொருளியல் துறை மூன்றாமாண்டு ஆங்கிலவழி மாணவி சு.மாரியம்மாள் மூன்றாம் பரிசாக கேடயத்தை வென்றது பெருமைக்குரியது.

## தாத்தா பாட்டி மற்றும் மாணவியர் குழு

ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் தாத்தா பாட்டி மற்றும் மாணவியர் மன்றக் கூட்டம் 15.3.2024 அன்று ரூசா அரங்கில் நடைபெற்றது. முதகலை மற்றும் தமிழாய்வுத்துறை உதவிப்பேராசிரியர் கோ.விஜெயம் அவர்கள் விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்கள் விழாவில் தலைமையுரையாற்றி, வீட்டில் பெரியோர்களின் உடனிருப்பின் அவசியத்தை எடுத்துரைத்தார்கள்.

முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறைத்தலைவா் முனைவா் சு.சந்திரா அவர்கள் தமது சிறப்புரையுரையில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை- உறவுகளின் மேன்மை, பெரியவர்கள் நாட்டின் சொத்து போன்ற விழுமிய கருத்துக்களை எடுத்துரைத்தாா்.

மாணவியரின் தாத்தா பாட்டிகள் தங்களின் அனுபவப்பூர்வமான கருத்துக்களை நெகிழ்வுடனும், மகிழ்வுடனும் பதிவு செய்தார்கள். மாணவியர் தங்களது தாத்தா பாட்டி உடனிருத்தலின் மேன்மையை, மகிழ்வை எடுத்துக்கூறினார்கள். விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ம.கலையரசி அவர்கள் நன்றியுரையாற்றினாா்.

### மாணவியருக்கான ஆற்றுப்படுத்தல் மன்றம்

நமது கல்லூரியின் மாணவியர் ஆற்றுப்படுத்தல் அமைப்பு மற்றும் Gender Sensitization & Internal Complaints Committee இணைந்து “நான் த்வனி” எனும் விழிப்புணர்வு நிகழ்வினை PCVC எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனம், சென்னை மற்றும் REACT அமைப்பு மதுரை, இவர்களுடன் சேர்ந்து 21.12.2023 அன்று நடத்தியது. இந்நிகழ்வில் குடும்ப வன்முறை, சைபர் குற்றங்கள் மற்றும் பாலியல் துன்புறுத்தல் பற்றிய விஷயங்கள் உரையாடல் முறையில் விளக்கப்பட்டது. 1800 இளநிலை மற்றும் முதுகலை மாணவியர் இந்நிகழ்வில் பயன்பெற்றனர்.

### நிச் மன்றம்

நிச் கிளப்பின் சார்பாக செப்டம்பர் 25, 2023 அன்று BIG BUTTERFLY MONTH -23 மதுரை அமெரிக்கன் கல்லூரி விலங்கியல் துறைப் பேராசிரியர் திரு. ராஜேஷ் மாணவிகளுக்கு பட்டாம்பூச்சியின் முக்கியத்துவத்தைக் குறித்து விளக்கினார். விலங்கியல் மூன்றாமாண்டு மாணவிகள் 50 பேர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கல்லூரி முழுவதிலும் ஏறத்தாழ 25 வகையான பட்டாம்பூச்சி இனங்களைக் கண்டறிந்தனர்.

### முன்னாள் மாணவியர் சங்கம்

ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியின் முன்னாள் மாணவியர் சங்கம் 29.05.2015 அன்று சங்கங்கள் பதிவுச் சட்ட விதிகளின் பிரிவு 10ன் கீழ் பதிவு செய்யப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. துணைச் சட்ட விதிகளின்படி முன்னாள் மாணவியர் சங்கம் 10 உறுப்பினர்களைக் கொண்டு செயல்படுகிறது. முதல்வர் முனைவர் சூவானதி அவர்கள் தலைவராகவும், ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியர் முனைவர் அ.இராஜேஷ்வரபுஷ்பம் செயலாளராகவும் வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் அ.சமீன் பானு பொருளாளராகவும் ஏழு செயற்குழு உறுப்பினர்களுடன் தற்போது செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் கல்லூரியில் முன்னாள் மாணவியர் சங்கத்தின் மூலமாக பட்டமளிப்பு விழா சிறப்பாக நடத்தப்படுகிறது. இறுதியாண்டு பட்டதாரிகள், முதுநிலை பட்டதாரிகள், மற்றும் பி.எச்.டி. ஆராய்ச்சி அறிஞர்கள் இந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

முன்னாள் மாணவியர் சந்திப்பு - புவியியல் துறையில் 1983-1988 இளநிலை மற்றும் முதுநிலை புவியியல் மாணவியரின் சந்திப்புக் கூட்டம் 13.08.2023 அன்று நடைபெற்றது. இக்கூட்டம் நமது கல்லூரி ரூசா 2ஆம் அரங்கில் நமது முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இச்சந்திப்பில் முன்னாள் மாணவி திருமதி A.D.P.சாந்தி அவர்கள் புவியியல் துறைக்கு ஒலிபெருக்கி அமைப்பு மற்றும் மேடை (Podium), கல்லூரிக்கு குளிர்சாதனமும் வழங்கியுள்ளார்கள் என்பது முன்னாள் மாணவியர் சங்கத்திற்குப் பெருமை சேர்க்கும் நிகழ்வாகும்.

### அறிவியல் மன்றம்

28.02.2024 அன்று அறிவியல் மன்றம் சார்பாக தேசிய அறிவியல் தினத்தைக் கொண்டாடும் விதமாக சிறப்புரை ஏற்பாடு செய்யப்பட்டது. அட்மாஸ்பியர் என்ற தலைப்பில் திருமதி.ந.போதுமணி, இணைப்பேராசிரியர் புவியியல் துறைத்தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

### நுண்கலை மன்றம்

2023-2024 ஆம் கல்வியாண்டிற்கான OFF STAGE நுண்கலைப் போட்டிகள் 20.02.2024 அன்று நடைபெற்றன. கல்லூரி வளாகம் எங்கும் வண்ணக்கோலங்கள், புள்ளிக்கோலங்கள், தோழிகளின் கைகளில் மருதாணி இட்டும், முகங்களில் வண்ணம் தீட்டியும் மாணவியர் தங்கள் திறனை வெளிப்படுத்தினர். மேலும் எம் மாணவியர் பூங்கொத்து அமைத்தல், நெருப்பில்லாத ஆரோக்கியமான உணவு தயாரித்தல், நாட்டுப்புற, மெல்லிசைப் பாடல் போட்டிகள், வரலாறு இலக்கியத்தில் இருந்து முக்கிய கதாபாத்திரங்களின் வேடம் தரித்தல் என பல்வேறுப் போட்டிகளில் வரிசைக்கட்டிப் பங்கேற்று தங்கள் திறமையை வெளிப்படுத்தினர்.

22.02.2024 மற்றும் 23.02.2024 ஆகிய நாட்களில் நடைபெற்ற நுண்கலை மேடைப் போட்டிகளை நம் கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி அம்மா அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். பரதம், கிராமிய நடனம், தமிழ் மற்றும் ஆங்கில நாடகம், இந்திய மற்றும் மேற்கத்திய நடனங்களை இணைத்தும், மௌன மொழியில் சீரிய கருத்துக்களை ஆழமாக பதிவிடும் “மைம்ஷோ'', இந்திய மாநிலங்களின் கலாச்சார உடை அணிதல் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் கலாச்சார நடனங்கள் என பல்வேறு போட்டிகளில் துறை வாரியாக பங்கேற்று போட்டியிட்டுப் பரிசுகளை வென்றனர்.

நுண்கலை மன்ற ஒருங்கிணைப்பாளராக விலங்கியல் துறைத்தலைவர் வெ.கபிலா அவர்களும், நிகழ்வுகளை விலங்கியல் துறைப் பேராசிரியர்களும் பொறுப்பேற்று நடத்தினர். கல்லூரி மாணவியரின் கலைத்திறனை மேம்படுத்த விலங்கியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஜோதி சாம் அவர்களின் தலைமையில் கலாச்சாரக் குழு செயல்படுகிறது.

### கல்லூரிச் சந்தை

வணிகவியல் நிர்வாகவியல் துறை, ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த) மதுரை மாவட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில அரசு/நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து 24.08.23 மற்றும் 25.08.23 ஆகிய தேதிகளில் கல்லூரிச் சந்தையை நடத்தியது. திரு. சரவணன் இ.ஆ.ப. கூடுதல் ஆட்சியர் மதுரை மாவட்டம் மற்றும் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக/ நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் துவக்கி வைத்தார். இந்தச் சந்தையில் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த 35 சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டன. வணிக நிர்வாகவியல் துறை மாணவர்கள் குழுக்களின் தயாரிப்புகளைச் சந்தைப்படுத்த உதவினார்கள். சந்தையின் மொத்த மதிப்பு ரூ.1,00,000 ஆகும்.

### பொறுப்பாசிரியர் மாணவியர் கூட்டம்

கல்லூரியில் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு ஆசிரியர் தம் வகுப்பு மாணவியர்களுக்கு பொறுப்பாசிரியராக இருந்து மாணவியர் நலம் பேணும் திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் ஆலோசனைக் கூட்டங்கள் அனைத்துத் துறைகளிலும் நடத்தப்படுகின்றது.

பொறுப்பாசிரியர்கள் மூலம் மாணவியருக்குக் கல்வியின் முக்கியத்துவம், ஒழுக்கம், காலந்தவறாமை பற்றியும் அவ்வப்போது அறிவுறுத்தப்படுகிறது. பொறுப்பாசிரியர்கள் தேவையான நேரங்களில் பெற்றோர்களை அழைத்து மாணவியர்களின் நடவடிக்கை மற்றும் அவர்களது கல்வி முன்னேற்றத்தைப் பற்றி ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்குகின்றனர்.

இக்கல்வியாண்டில் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும், மேம்பாட்டிற்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும் காரணமாக உள்ள தமிழக அரசுக்கும், பல்கலைக்கழக மானிய குழுவிற்கும், கல்லூரியின் அனைத்து செயல்பாட்டிற்கும் உறுதுணையாக நிற்கும் எம் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கும், மதுரை மண்டல கல்விக் கல்லூரி இணை இயக்குநர் அவர்களுக்கும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்கும், முன்னாள் மாணவியர் சங்கத்திற்கும், கல்லூரியின் மேன்மைக்கு அரும்பாடுபடும் பேராசிரியர்களுக்கும், ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும், இதர பணியாளர்களுக்கும், பத்திரிக்கை நண்பர்களுக்கும், மற்றும் மாணவியர்களுக்கும் கல்லூரி ஆண்டு விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றி கல்லூரி முதல்வரால் தெரிவிக்கப்பட்டது.



# இயற்கையில் கணிதம்

கணிதமே! இதோ உனக்காக ஒரு கவிதை!!!
விண்மீன்களைப் பார்க்கின்றேன் அதன்
எண்ணிக்கையில் தெரிகின்றாய் கூட்டலாய்!
சிகரத்தைப் பார்க்கின்றேன் அதன்
உயரத்தில் தெரிகின்றாய் மீட்டராய்!
நிலவைப் பார்க்கின்றேன் அதன்
வடிவத்தில் தெரிகின்றாய் வட்டமாய்!
கடலைப் பார்க்கின்றேன் அதன்
கொள்ளையில் தெரிகின்றாய் கனலிட்டராய்!
பிரபஞ்சத்தைப் பார்க்கின்றேன் அதன்
தூரத்தில் தெரிகின்றாய் முடிவிலியாய்!
கடிகாரத்தைப் பார்க்கின்றேன் அதன்
முட்களில் தெரிகின்றாய் மணித்துளியாய்!
சுவாசித்துப் பார்க்கின்றேன் என்
சுவாசத்திலும் இருக்கின்றாய் இதயத்துடிப்புகளாய்!
யோசித்துப் பார்க்கின்றேன் எதில்தான்
நீ இல்லையென்று ???
என் யோசனை வீணானது
ஏனெனில் அனைத்திலும் நீ இருக்கின்றாய்!
கூட்டலாய், கழித்தலாய், பெருக்கலாய், வகுத்தலாய்
என் வாழ்க்கையின் வடிவியலாய் நீ இருக்கின்றாய்!
உன் சூத்திரங்களின் துணை கொண்டு
அணுவையும் அண்டத்தையும் ஆராய்பவர்களை
பிரம்மிக்கவைக்கும் பிரபஞ்சத்தின் பிதாமகளே!
இயற்கை அறிவியலின் ராணியே!
எங்கள் இராஜமாதாவே!
நான் படிப்பதில் எனக்கு பெருமையில்லை
உன்னைத் தேர்வு செய்து படிப்பதில்தான்
நான் பெருமை கொள்கிறேன்!!!

- **D.Priyadharshini**
III B.Sc., Maths (EM)
Shift - I

# LILY....

*Oh my dear lily flower,*
*I know how pure you are*
*Spread you calmness everywhere*
*with a little bit of love and care*

*Yeah! white symbolizes peace*
*You too have such nature of peace*
*you are as melodies as a song*
*Don't make me wait so long*

*No other flower can replace you,*
*Because, you are unique and new,*
*You are an unheard tune*
*I'm longing to see you soon*

**- K.Sameera**
II B.A. English
(Shift I)

## PROFILE OF NATURE

Hegemonical darkness
Puzzles wander around my mind
Warfare in finding defenses
Leaping midmost trees
What's more shield
Apart from sub society
Scarcity of mortals
Emotional flashing thoughts
Discovering serene sensitivity
Dwelling in contended realm
In the advance of traveling past shadow
Accompanying diverse self
Ascertaining inevitable nature of life
Observing choppy clouds
Shell-shocked inquest
Embarrassing shapes
Resembles human brain
Disturbing interim thoughts
Surrounded alter emotions
Experiencing living force
Bounce foundation of ecstasy

**- R.Shalini**
II M.A. English

# தாயின் அன்பு



- **C.P.Monica**
I B.Sc., Chemistry (EM)




- **B.Naganathini**
II B.Sc., Chemistry (TM)


Anything is Possible
through Science
OH
HO
P. Balasoundarya
II. BSc (chemistry)
(TM)

## புதிய மாணவர் வருகை புத்தொளிப் பயிற்சி



03.07.2023 அன்று நடைபெற்ற புதிய மாணவர் வருகை புத்தொளிப் பயிற்சி நிகழ்வில் சிறப்பு விருந்தினர் திரு.நிக்கோலஸ் பிரான்சிஸ், தன்னம்பிக்கை பேச்சாளர் மற்றும் பயிற்றுநர் அவர்களுடன் எம் மாணவியர்கள்

## உலக அளவில் விதைப்பந்து தயாரித்தல்



09.08.2023 அன்று உலக அளவில் விதைப்பந்து தயாரிக்கும் இளம்நிலை இரண்டாமாண்டு மாணவிகள்

## 77 ஆவது சுதந்திர தினவிழா



15.08.2023 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் கூ.வானதி அவர்கள் கொடியேற்றும் நிகழ்வு

## முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு – ஆட்சிமொழி கருத்தரங்கம்



31.07.2023 அன்று நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு - ஆட்சி மொழிக் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினர் அவர்களுடன் கல்லூரி முனைவர் கூ.வானதி மற்றும் கல்லூரி தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர் சு.சந்திரா



77ஆவது சுதந்திர தின விழாவில் தேசிய மாணவர் படை நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் மௌன மொழி நாடகம்

## கலைஞர் நூற்றாண்டு விழா



31.08.2023 அன்று நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவினில் பேருரையாற்றிய வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஷாலினி அவர்களுடன் எமது கல்லூரி முதல்வர் முனைவர் கூ.வானதி மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர், இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த் துறைத்தலைவருமான முனைவர் சு. சந்திரா அவர்கள்



31.08.2023 அன்று நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மதுரை மாவட்ட அளவிலான பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட எம் மாணவி மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

## காந்தி ஜெயந்தி விழா



03.10.2023 அன்று நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவில் கைத்தறித்துணி மற்றும் கூட்டுறவுத்துறையின் வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு மேலாளர் திரு.மோகன் குமார், மதுரை கைத்தறித்துறை உதவி இயக்குநர் திரு.எஸ்.பாலசுப்பிரமணியன் அவர்களுடன் எம் கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள்

## கல்லூரிப் பேரவைத் துவக்க விழா



11.10.2023 அன்று நடைபெற்ற பேரவைத் துவக்க விழாவில் சிறப்பு விருந்தினர் தியாகராசர் கல்லூரியின் மேனாள் முதல்வர் பேராசிரியர் முனைவர் இரா.இராஜ கோவிந்தசாமி அவர்கள், முதல்வர், பேராசிரியர் பெருமக்களுடன் பேரவைத் தலைவி சி.ரம்யா மற்றும் பேரவைப் பொறுப்பாளர்கள்

## நூல் வெளியீட்டு விழா



08.12.2023 அன்று தமிழ் உயிராய்வுத் துறை சார்பில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் பேரா.சாலமன் பாப்பையாவுடன் சிறப்பு விருந்தினர்கள், கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள்

## சர்வோதய தின விழா



30.01.2024 அன்று நடைபெற்ற சர்வோதய தின விழாவில் சிறப்புரையாற்றிய பொறியியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் அ.ஜோஸ்பின் வனிதா அவர்களும் கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள்

## குடியரசு தினவிழா



26.01.2024 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் கூ.வானதி அவர்கள் கொடியேற்றிய நிகழ்வு



26.01.2024 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில் இணைப்பேராசிரியர் மற்றும் புவியியல் துறைத்தலைவர் திருமதி.நா.போதுமணி அவர்கள் சிறப்புரையாற்றும் நிகழ்வு

## நுண்கலை விழா



23.02.2024 அன்று நடைபெற்ற நுண்கலை விழாவில் நடனப் போட்டியில் பங்கேற்ற மாணவியர்

## முத்தமிழ் விழா




20.03.2024 அன்று நடைபெற்ற முத்தமிழ் விழாவில் காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் ச.முருகேசன் அவர்கள் இன்றைய இளைஞர்களைப் பெரிதும் நெறிப்படுத்துவது வீடே! வீதியே! என்ற தலைப்பின் பொருண்மையில் கருத்துக்களை வழங்கும் நிகழ்வு

## விளையாட்டு விழா



21.03.2024 அன்று நடைபெற்ற விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினர் திரு.பெ.சிவக்குமார், தேசிய தடைகள வீரர், உடற்கல்வி இயக்குநர், அரசு மகளிர் கலைக்கல்லூரி, சேலம் அவர்களுடன் கல்லூரி முதல்வர், உடற்கல்வித்துறைப் பேராசிரியர் முனைவர் செ.ரமேஷ் அவர்கள் மற்றும் விளையாட்டுத் துறை மாணவியர்

## கல்லூரி நாள் விழா



22.03.2024 அன்று நடைபெற்ற கல்லூரி நாள் விழாவில் சிறப்பு விருந்தினர் மதுரை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் அ.குணசேகரன் அவர்களிடம் பரிசு பெறும் கல்லூரிப் பேரவைத் தலைவி சி.ரம்யா

## பேரவை நிறைவு விழா




27.03.2024 அன்று கல்லூரிப் பேரவை நிறைவு விழாவில் சிறப்பு அவர்களுடன் கல்லூரி முதல்வர் தேர்வுக்கட்டுப்பாட்டாளர் பேரவைத் தலைவி சி.ரம்யா மற்றும் பேரவைப் பொறுப்பாளர்கள்

# பெருமை மிகு தருணங்கள்



## தேசிய மாணவர் படை

நியூ டெல்லி **RDC** 2024-ல் பங்கேற்ற வணிகவியல் துறை மாணவி **CUO S.**லத்திகா மற்றும் வரலாற்றுத்துறை மாணவி **SUO G.** மேனகா





சென்னை RDC - ஜனவரி 2024ல் பங்கேற்ற கணினி பயன்பாட்டியல் துறை மாணவி M.சத்யப்பிரியா

# நம் கல்லூரியில் சிறப்பாக பணிபுரிந்து ஓய்வு பெறும் பேராசிரியர்கள்



முனைவர் திருமதி.பா.கஸ்தூரி ராணி
வணிகவியல் துறை
துறைத்தலைவர் மற்றும்
இணைப் பேராசிரியர்



முனைவர் திரு.ப.ராசமகேந்திரன்
பொருளியல் துறை
இணைப் பேராசிரியர்



திருமதி.நா.போதுமணி
புவியியல் துறை
துறைத்தலைவர் மற்றும்
இணைப் பேராசிரியர்



## விருப்ப ஓய்வு பெறும் பேராசிரியர்

திருமதி.வெ.நளினி
ஆங்கிலத்துறை
இணைப் பேராசிரியர்

முனைவர் திருமதி.நீ.மீனாட்சி
ஆங்கிலத்துறை
உதவிப் பேராசிரியர்





முனைவர் திரு.கொ.இளங்கோவன்
வேதியியல் துறை
இணைப் பேராசிரியர்



முனைவர் திருமதி.அ.ஜோஸ்பின் வனிதா
வேதியியல் துறை
உதவிப் பேராசிரியர்



முனைவர் திருமதி.சு.குமாரி ஜனனி
பொருளியல் துறை
இணைப் பேராசிரியர்



திருமதி.மு.சிராசுனிசா பேகம்
புவியியல் துறை
உதவிப் பேராசிரியர்



முனைவர் திருமதி.ச.மாலா
விலங்கியல் துறை
உதவிப் பேராசிரியர்

# SRI MEENAKSHI GOVERNMENT ARTS COLLEGE FOR WOMEN (AUTONOMOUS), MADURAI -2

## Proficiency Prize Winners 2023 - 2024

### Part I – Tamil

**I Shift**

**Arts**

| | | | |
|---|---|---|---|
| 1. | ISHWARYA T | III B.A Tamil | I PRIZE |
| 2. | MEENA K | III B.A Tamil | II PRIZE |

**Science**

| | | | |
|---|---|---|---|
| 3. | ABITHA S | III B.Sc Physics (EM) | I PRIZE |
| 4. | RAMYA S | III B.Sc Zoology (EM) | II PRIZE |

**Commerce**

| | | | |
|---|---|---|---|
| 5. | PRIYADHARSHINI S | III B.Com | I PRIZE |
| 6. | DURGA DEVI P | III B.Com | II PRIZE |

**II Shift**

**Arts**

| | | | |
|---|---|---|---|
| 7. | RUBI ANITHA R | III B.A Tamil | I PRIZE |
| 8. | THAMARAISELVI V | III B.A Tamil | II PRIZE |

**Science**

| | | | |
|---|---|---|---|
| 9. | SIVARANJANI S | III B.Sc Computer Science | I PRIZE |
| 10. | NAVEENA J | III B.Sc Computer Science | II PRIZE |

**Commerce**

| | | | |
|---|---|---|---|
| 11. | ANGALAPARAMESWARI P | III B.Com | I PRIZE |
| 12. | ANNAPOORANI M | III B.Com | II PRIZE |

### Part I – Hindi

**I Shift**

| | | | |
|---|---|---|---|
| 13. | SHANMUGA PRIYA T | III B.Sc Chemistry (EM) | I PRIZE |
| 14. | HARINI S | III B.Sc Geography (EM) | II PRIZE |

**II Shift**

| | | | |
|---|---|---|---|
| 15. | ------------ | ------------------- | I PRIZE |

## Part II - English

### I Shift

### Arts

| | | | |
|---|---|---|---|
| 16 | LALITHA SHREE D | III B.A Tamil | I PRIZE |
| 17 | BALABHARATHI P | III B A English | II PRIZE |

### Science

| | | | |
|---|---|---|---|
| 18 | GAAYATHRI R | III B.Sc Physics (EM) | I PRIZE |
| 19 | KIRUTHIKA P | III B.Sc Geography (EM) | II PRIZE |

### Commerce

| | | | |
|---|---|---|---|
| 20 | MUTHUPETCHI S | III B.Com | I PRIZE |
| 21 | DEVI BALA D | III B.Com | II PRIZE |

### II Shift

### Arts

| | | | |
|---|---|---|---|
| 22 | RUBI ANITHA R | III B.A Tamil | I PRIZE |
| 23 | SINDHUJA A | III BA English | II PRIZE |

### Science

| | | | |
|---|---|---|---|
| 24 | SAKTHI PRIYADHARSHINI K | III B.Sc Computer Science | I PRIZE |
| 25 | PRATHIKSHA R | III B.Sc Computer Science | II PRIZE |

### Commerce

| | | | |
|---|---|---|---|
| 26 | NATCHATRA K | III B.Com | I PRIZE |
| 27 | NABISHA S | III B.Com | II PRIZE |

## Part III - Major

## B.A Tamil

### I Shift

| | | | |
|---|---|---|---|
| 28 | ISHWARAYA T | III B.A Tamil | I PRIZE |
| 29 | LALITHA SHREE D | III B.A Tamil | II PRIZE |

### II Shift

| | | | |
|---|---|---|---|
| 30 | RUBI ANITHA R | III B.A Tamil | I PRIZE |
| 31 | THAMARAI SELVI V | III B.A Tamil | II PRIZE |

## M.A Tamil

| | | | |
|---|---|---|---|
| 32 | MEHARAJ BEGAM S | II M.A Tamil | I PRIZE |
| 33 | TAMILSELVI P | II M.A Tamil | II PRIZE |

## B.A English

### I Shift

| | | | |
|---|---|---|---|
| 34 | BALA BHARATHI P | III B.A English | I PRIZE |
| 35 | VASANTHA ABIRAMI J | III B.A English | II PRIZE |

### II Shift

| | | | |
|---|---|---|---|
| 36 | SINDHUJA A | III B.A English | I PRIZE |
| 37 | FATHIMA AYSHA S | III B.A English | II PRI ZE |

## M.A English

| | | | |
|---|---|---|---|
| 38 | SHOBANA S | II M.A English | I PRIZE |
| 39 | GOKULAMATHI L | II M.A English | II PRIZE |

## B.A History

| | | | |
|---|---|---|---|
| 40 | 1. MUTHUSELVI P<br>2. SUVASHINI V | III B.A History (EM) | I PRIZE |
| 41 | MATHINA S | III B.A History (EM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 42 | MAHALAKSHMI P | III B.A History (TM) | I PRIZE |
| 43 | MUTHUVANITHA R | III B.A History (TM) | II PRIZE |

## M.A History

| | | | |
|---|---|---|---|
| 44 | MEENAKSHI J | II M.A History | I PRIZE |
| 45 | JOTHILAKSHMI G | II M.A History | II PRIZE |

## B.A Economics

| | | | |
|---|---|---|---|
| 46 | RAMYA R | III B.A Economics (EM) | I PRIZE |
| 47 | REEMA M | III B.A Economics (EM) | II PRI ZE |

| | | | |
|---|---|---|---|
| 48 | PAVITHRA M (U21ECT29292) | III B.A Economics (TM) | I PRIZE |
| 49 | PAVITHRA M (U21ECT29293) | III B.A Economics (TM) | II PRIZE |

## M.A Economics

| | | | |
|---|---|---|---|
| 50 | RAJESHWARI K | II M.A Economics | I PRIZE |
| 51. | MENAKA M | II M.A Economics | II PRIZE |

## Commerce

### I Shift

| | | | |
|---|---|---|---|
| 52 | SINDHUJA R | III B.Com | I PRIZE |
| 53 | KOUSHIKA C | III B.Com | II PRIZE |

### II Shift

| | | | |
|---|---|---|---|
| 54 | SANGEETHA S | III B.Com | I PRIZE |
| 55 | SHARMILA M | III B.Com | II PRIZE |

## M.Com

| | | | |
|---|---|---|---|
| 56 | THAMARAI S | II M.Com | I PRIZE |
| 57 | DHARANIKA R | II M.Com | II PRIZE |

## BBA

| | | | |
|---|---|---|---|
| 58 | SATHEESWARI M | III BBA | I PRIZE |
| 59 | BAVANI G | III BBA | II PRIZE |

## MBA

| | | | |
|---|---|---|---|
| 60 | SHALINI K | II MBA | I PRIZE |
| 61 | ASHWATHY G | II MBA | II PRIZE |

## B.Sc Mathematics

### I Shift

| | | | |
|---|---|---|---|
| 62 | ATCHAYA P | III B.Sc Maths(EM) | I PRIZE |
| 63 | JEEVIKA B | III B.Sc Maths(EM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 64 | ANBARASI | III B.Sc Maths(TM) | I PRIZE |
| 65 | SATHYAPRIYA L | III B.Sc Maths(TM) | II PRIZE |

### II Shift

| | | | |
|---|---|---|---|
| 66 | AKSHAYA SRI S | III B.Sc Maths(EM) | I PRIZE |
| 67 | TAMILARASI M | III B.Sc Maths(EM) | II PRIZE |

## M.Sc Mathematics

| | | | |
|---|---|---|---|
| 68 | GAYATHRI P | II M.Sc Maths | I PRIZE |
| 69 | NASREEN BANU J | II M.Sc Maths | II PRIZE |

## B.Sc Physics

| | | | |
|---|---|---|---|
| 70 | JANNATHUL FIRDHOUSE J | III B.Sc Physics(EM) | I PRIZE |
| 71 | DHARSHINI R. | III B.Sc Physics(EM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 72 | MUTHUNAGA JOTHI N | III B.Sc Physics(TM) | I PRIZE |
| 73 | DEEPA P | III B.Sc Physics(TM) | II PRIZE |

## M.Sc Physics

| | | | |
|---|---|---|---|
| 74 | KALEESWARI L | II M.Sc Physics | I PRIZE |
| 75 | JANANI K | II M.Sc Physics | II PRIZE |

## B.Sc Chemistry

| | | | |
|---|---|---|---|
| 76 | SHANMUGAPRIYA T | III B.Sc Chemistry(EM) | I PRIZE |
| 77 | AMIRTHA P | III B.Sc Chemistry(EM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 78 | MITHRA K | III B.Sc Chemistry (TM) | I PRIZE |
| 79 | BHUVANESWARI B | III B.Sc Chemistry(TM) | II PRIZE |

## M.Sc Chemistry

| | | | |
|---|---|---|---|
| 80 | VAISHNAVI M | II M.Sc Chemistry | I PRIZE |
| 81 | ASTALAKSHMI A | II M.Sc Chemistry | II PRIZE |

## B.Sc Zoology

| | | | |
|---|---|---|---|
| 82 | SOUNDARYA M | III B.Sc Zoology(EM) | I PRIZE |
| 83 | RAMYA S | III B.Sc Zoology(EM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 84 | ILAKKIYA R | III B. Sc Zoology(TM) | I PRIZE |
| 85 | ALAGI B | III B.Sc Zoology(TM) | II PRIZE |

## M.Sc Zoology

| | | | |
|---|---|---|---|
| 86 | KEERTHANA V | II M.Sc Zoology | I PRIZE |
| 87 | SANJU G | II M.Sc Zoology | II PRIZE |

## B.Sc Botany

| | | | |
|---|---|---|---|
| 88 | RASI T | III B.Sc Botany | I PRIZE |
| 89 | PANDEESWARI M | III B.Sc Botany | II PRIZE |

## M.Sc Botony

| | | | |
|---|---|---|---|
| 90 | DHIVYA C | II M.Sc Botany | I PRIZE |
| 91 | MUNEESWARI A | II M.Sc Botany | II PRIZE |

## B.Sc Geography

| | | | |
|---|---|---|---|
| 92 | KIRUTHIKA P | III B.Sc Geography(EM) | I PRIZE |
| 93 | JANARANJANI PA | III B.Sc Geography(EM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 94 | VARALAKSHMI S | III B.Sc Geography(TM) | I PRIZE |
| 95 | RAMYA S | III B.Sc Geography(TM) | II PRIZE |

## M.Sc Geography

| | | | |
|---|---|---|---|
| 96 | BHARATHI S | II M.Sc Geography | I PRIZE |
| 97 | ACHAYAPRIYA S | II M.Sc Geography | II PRIZE |

## B.Sc Home Science

| | | | |
|---|---|---|---|
| 98 | ANUSIYA D | III B.Sc Home Science | I PRIZE |
| 99 | CHITRARAGINI S | III B.Sc Home Science | II PRIZE |

## M.Sc Home Science

| | | | |
|---|---|---|---|
| 100 | JEYABHARATHI R | II M.Sc Home Science | I PRIZE |
| 101 | GOKILA N | II M.Sc Home Science | II PRIZE |

## B.Sc Computer Science

### I Shift

| | | | |
|---|---|---|---|
| 102 | 1. MUTHUMEENA A<br>2. SANTHI A | III B.Sc Computer Science | I PRIZE |
| 103 | NAGA NANDHINI R. | III B.Sc Computer Science | II PRIZE |

### II Shift

| | | | |
|---|---|---|---|
| 104 | GAYATHRI B | III B.Sc Computer Science | I PRIZE |
| 105 | PRITHIKSHA R | III B.Sc Computer Science | II PRIZE |

## M.Sc Computer Science

| | | | |
|---|---|---|---|
| 106 | DIVYA SREE K R | II M.Sc Computer Science | I PRIZE |
| 107 | DASBIKA S | II M.Sc Computer Science | II PRIZE |

## BCA

| | | | |
|---|---|---|---|
| 108 | HELINA MERLINE J | III BCA | I PRIZE |
| 109 | MAHALAKSHMI K | III BCA | II PRIZE |

## MCA

| | | | |
|---|---|---|---|
| 110 | AKSHAYA K R | II MCA | I PRIZE |
| 111 | VANMATHI R | II MCA | II PRIZE |

## GENERAL PROFICIENCY PRIZE 2023-2024

| | | | |
|---|---|---|---|
| 112 | ARTS | TAMIL | T.ISWARYA<br>III B.A. TAMIL |
| 113 | SCIENCE | MATHEMATICS | B.JEEVIKA<br>III B.Sc MATHS (EM)<br>SHIFT -I |
| 114 | COMMERCE | COMMERCE | R.SINDUJA<br>III B.Com – SHIFT - I |

## Endowment Prizes

**I.** Prize instituted by Mrs. I. Anis Parvin , Former Head and Associate Professor of English (Rtd.), in memory of her grandmother, uncle and her father respectively.

**Janab Pirani Bi Memorial Prize to the Outstanding Student in Part II General English.**

| | | |
|---|---|---|
| 115 | S.MUTHU PETCHI | III B.Com (Shift – I) |
| 116 | R.GAYATHRI | III B.Sc. Physics EM |

**Janab CM. Hussain Memorial Prize to the Best Service Minded Student in B.A.English.**

| | | |
|---|---|---|
| 117 | M.SIVARANJANI | III BA English Shift- II |

**Janaba CM. Ibrahim Memorial Prize to the Best student in MA English .**

| | | |
|---|---|---|
| 118 | L.GOKULAMATHI | II MA English |

**II.** Prize instituted by Mrs.S. Indrapathy, Former Head and Associate Professor of English (Rtd.), in memory of her father S. Srinivasan and mother S.Andal Srinivasan, Father-in-law V.Srinivasan and Mother-in-law S.Janaki Srinivasan.

**S. Srinivasan Memorial Prize given to the Student scoring the highest mark in B.A.Part - II General English.**

| | | |
|---|---|---|
| 119 | R.RUBI ANITHA | III B.A Tamil (Shift– II ) |

**S. Andal Srinivasan Memorial Prize given to the Student scoring the highest mark in B.Sc. Part -II General English.**

| | | |
|---|---|---|
| 120 | R.GAYATHRI | III B.Sc. Physics EM |

**V. Srinivasan Memorial Prize given to the Best Outstanding Student in B.A. English.**

| | | |
|---|---|---|
| 121 | S.SHAGANAA | III B.A. English(Shift– I) |

**S.Janaki Srinivasan Memorial Prize given to the Best Outstanding Student in M.A. English.**

| | | |
|---|---|---|
| 122 | I.R.SHALINI | II M.A. English |

**III.** Pon. Ravichandran Memorial Cash Prizes instituted by Dr. Mrs. Krishna Ponnusamy (Rtd.,) Professor of English, in memory of her son Er. Pon. Ravichandran

**Pon. Ravichandran Memorial Cash Prize for Meritorious Student of B.A. English.**

| | | |
|---|---|---|
| **123** | **P.BALABHARATHI** | **III BA English (Shift I)** |

**Pon. Ravichandran Memorial Cash Prize for Meritorious Student of M.A. English.**

| | | |
|---|---|---|
| **124** | **S.SHOBANA** | **II M.A English** |

**Pon. Ravichandran Memorial Cash Prize for Meritorious Student of B.Sc. Computer Science**

| | | |
|---|---|---|
| **125** | **M.PRIYADHARSHINI** | **III B.Sc. Computer Science (Shift I)** |

**IV.** Prize instituted by the Department of Zoology , SMGC, Madurai, for Proficiency in Major Zoology.

| | | |
|---|---|---|
| **126** | **M.SOUNDARYA** | **III B.Sc. Zoology EM** |

**V. Dr.M. இளம்பரிதி அறக்கட்டளை மூலம் இக்கால தமிழ் என்ற பாடத்திட்டத்தில் அதிக மதிப்பெண் பெற்றமைக்காக பரிசு பெறும் மாணவி**

| | | | |
|---|---|---|---|
| **127** | **K.FATHIMA SIDDIKA** | **III B.A Tamil** | **Rs. 8,963/-** |

# NOTES

# NOTES